
# எழுத்தாணி

பல்சுவை இதழ்

ஜீன் இதழ்-05 2012




ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# சிறந்த விழுமியங்களோடு கூடிய இதழியல் துறை வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.....



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் பயிற்சி நிலையம் தமிழ் ஊடகப்பரப்பில் முன்னோடியான ஒரு ஊடக பயிற்சி நிலையமாகும். 2003ம் ஆண்டு யுனெஸ்கோ நிறுவனத்தின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம் ஒரு தசாப்த காலமாக தனது சேவையை மிகுந்த இடர்மிக்க காலகட்டங்களோடு தொடர்கிறது.

தமிழ் ஊடகப்பரப்பில் தொழில்சார் ஊடகவியலை வளர்த்தெடுப்பதை தனது தூர இலக்காக கொண்டு பணி செய்து வருகின்றது. 'தொழில்சார் இதழியல்' என்ற பதம் எமது ஊடகச் சூழலில் நன்கு புரிந்து கொள்ளப்பட வேண்டிய ஏது நிலையிலேயே உள்ளது என்பதை நாம் புரிந்து கொண்டாக வேண்டும்.

நடு நிலைமை, ஜனநாயகத்தையும் மனிதவுரிமைகளையும் பாதுகாத்தல் போன்ற அடிப்படைகளில் சரியான, நேர்த்தியான, துல்லியமான, பக்கம் சாரா தகவல்களை ஏதொரு நெருக்கடியான சூழ்நிலையிலும் ஒரு ஊடகவியலாளன் அறிக்கையிடுகின்றதான நிலையை இது குறிக்கும் எனலாம். இந்த உன்னதமான சூழ்நிலை வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்பதற்கான எதிர்கால ஆளணியினரை உருவாக்குதல் மற்றும் ஏலவே இருக்கின்ற ஆளணியினரை அந்த உன்னத நிலை நோக்கி நகர்த்திச் செல்லுதல் என்ற உயர் இலட்சியத்தை கொண்டு இந்த நிறுவனம் இயங்கிவருகின்றது.

கடந்தகாலத்தின் சூழ்நிலைகளுக்கேற்றதாக இதனது அசைவியக்கம் இருந்தாலும் தற்போது பலபரிமாணங்களில் ஊடக வளங்கள் பயிற்சி மையம் இயங்கி வருகின்றது. இதற்கு தற்போதைய துணைவேந்தரின் தூர நோக்கு மற்றும் இயலாற்றல், ஒத்துழைப்பு என்பன மிகப் பெரும் உந்து சக்தியாக அமைந்திருக்கிறது என்பதை சொல்லியாக வேண்டும்.

இந்த பயிற்சிமையத்தில் பணி செய்கின்ற ஊடகவியலாளருக்கான டிப்ளோமா பயிற்சிகளும், புதிதாக ஊடகத்துறைக்குள் நுழைய விரும்புகின்றவர்களுக்கான முழு நேர டிப்ளோமா பயிற்சிகளை வழங்கிவருகின்றது. இத்தோடு ஊடகத்துறை ஆர்வலர்களுக்கான குறுங்காலப்பயிற்சிகள் மற்றும் பாடசாலைகளில் ஊடகம் பயிலும் மாணவர்களுக்கான பயிற்சிகள் என்று பல செயற்திட்டங்களை செயற்படுத்தி வயருகின்றது.

இதற்கு மேலதிகமாக புகைப்படக் கண்காட்சிகள், கருத்தரங்குகள், திரைப்படவிழாக்கள், களவிஜயங்கள், ஊடக நிறுவனங்களில் தொழில் பயிற்சிகள், இந்தியாவில் சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்ததான மேலதிக பயிற்சிகளென்று ஒரு ஊடகவியலாளனை உருவாக்குவதற்காக நிறையவே முதலிடுகின்றோம். நிச்சயம் இவையெல்லாம் வளர்ந்து பெரு விருட்சமாகும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

இங்கு, இலங்கையில் எந்த வொரு செயல் முறை சார்ந்த ஊடகப் பயிற்சியிலும் இல்லாத வகையில் பதிப்பூடகம், இலத்திரனியல் ஊடகம் மற்றும் இணைய ஊடகத்தில் சமாந்தரமா பயிற்சியளிக்கப்படுகின்றது. சர்வதேசரீதியாக பல அறிவார்ந்த மற்றும் அனுபவம் வாய்ந்தவர்களை யாழ்ப்பாணம் வரவழைத்து பயிற்சிகள் வழங்கப்படுகின்றன். ஊடக வளங்கள் பயிற்சி மையம் தமிழ் ஊடகத்துறைக்குக்கிடைத்த பொக்கிஷமென்றே நினைக்கிறேன். இதனை பாதுகாத்தல் நமது கடன்.

இரண்டுவருட டிப்ளோமா பயிற்சியில் பயிற்சி பெறுகின்ற இரண்டாமாண்டு மாணவர்கள் தமதுபயிற்சிக்காக இந்த சஞ்சிகையை வெளியிருகின்றார்கள்.மாணவர் முயற்சி என்பதால் பாராட்டப்பட வேண்டியது. இனி வரும் காலங்களில் இது மாணவ இதழாக மட்டுமின்றி தரமான இதழாகவும் வெளிவரும் என்ற நம்பிக்கையில் இதனை வெளியிடுகின்றோம்.

தே.தேவானந்த்,M.A,M.Sc.
இயக்குனர், ஊடக வளங்கள் பயிற்சி மையம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"

# எழுத்தாணி

இதழ்-05

யாழ் பல்பலைக்கழக ஊடக மைய
மாணவர்களின் பயிற்சி இதழ்

**ஆசிரியர் குழு**
முருகாந்தினி.எஸ்
சுகனியா.எஸ்
மிருஷா.கே
தட்சா.ஜோ

**நிர்வாக ஆசிரியர்**
தே. தேவானந்த்

**ஆலோசனை, வழிகாட்டல்**
ஆ.சபேஸ்வரன்

**பக்க வடிவமைப்பு**
முருகாந்தினி.எஸ்
சுகனியா.எஸ்

**ஆக்கங்கள்**
சுகனியா.எஸ்
தட்சா.ஜோ
முருகாந்தினி.எஸ்
மிருஷா.கே

ஏ.ஜே.எம். பிறவ்ஸ்

**வெளியீடு**
ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம்
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.

தொடர்புகளுக்கு
யாழ்ப்பாண பல்கலைக்கழக
ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம். (MRTC)
84, ஜீம்மா பள்ளி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
தொ.பே : 0212229873
Email: directormrtc@gmail.com

## உள்ளே...

பக்கங்கள்

அணிந்துரை

பண்டைய கால பணக்காரவீடு 05

கண்டனன் சீதையை 07

வீரராமா காளியில் வீரவாள் 10

மீள்குடியேற்றத்திற்கு முட்டுக் கட்டையாய் இருக்கும் கண்ணிவெடிகள் 12

ஊடக தர்மம் பெயரளவில் மட்டுமா? 14

நீலகிரியில் பழங்குடியினர் 16

மாகாணசபை முறைமையும் ஆளுநருக்கு உள்ள அதிகாரங்களும் 18

அறிவுக்கு விருந்தளிக்கும் ஆவணத் திரைப்படவிழா ' 20

இல்லாத ஒன்றிற்கு எதற்காக தினம் 21

பாவனையின்றிப் போன பண்டைய பொருள் 22

அழிந்து போகும் ஆன்மீகம் 24

எத்தனை பேருக்கு வாழ்வழிக்கின்றது? இந்த மெரினா கடற்கரை சாலை 26

அர்த்தமுள்ள திருமணம் 28

சமூகத்தில் தன்னிலை இழந்த பறை 29

மழைத்தூறலில் பிருந்தாவன் 31

# பண்டைய கால பணக்காரவீடு

யாழ்ப்பாண பிரதேச மக்களின் பண்பாட்டுக் கோலங்களில் ஒன்றாக வீடும் அமைகின்றது. மனித இனத்தின் வரலாற்றில் உணவிற்கு அடுத்தபடியாக உறைவிடம் முக்கிய இடம் பெறுகின்றது. யாழ்ப்பாண சமுதாயத்தவரிடம் வீடும் வளவும் என்ற சொல் முக்கிய இடம் பெறுகின்றது. வீட்டை சுற்றியுள்ள இடத்திற்கு பயன் தரு மரங்களையும் நிழல் மரங்களையும் வளர்த்திருப்பார்கள். ஆடு, மாடு, கோழி முதலியன வளர்ப்பதற்கான கொட்டில்களையும் அமைத்திருப்பார்கள்.

பண்டைய வீடுகள் பொருளாதார நிலைமையை எடுத்துக்காட்டுவதாக அமைந்தன. வறுமைப்பட்ட அடிநிலை சமுதாயத்தை சேர்ந்தவர்கள் சிறிய குடிசைகளையும் மண் வீடுகளையும் அமைத்து வாழ்ந்தனர். கொஞ்சம் பொருளாதார வசதி படைத்தவர்கள் விசாலமான மண் வீடுகளை கட்டி வாழ்ந்தனர். அரைச் சுவர் என மண்ணினால் சுவர் அமைத்து பனை யோலையாலோ, கிடுகினாலோ வேய்ந்து தரை, சுவர் போன்றவற்றை மெழுகி திண்ணை அமைத்திருந்தனர்.


மண் வீட்டில் வாழ்ந்தவர்கள் வசதி பெருக செங்கல், சுண்ணாம்புக்கல், சாந்து போன்றவற்றை பயன்படுத்தி வசதியான வீடுகளை அமைத்தனர். சமுதாயத்தில் மேல்வர்க்க மக்களே அதிகளவு வீடுகளை கட்டினர். 19 ஆம் நூற்றாண்டில் வீடு கட்டுவதற்கு தேவையான செங்கற்கள், ஓடுகள், மரங்கள் பிற நாடுகளில் இருந்து பருத்தித்துறை ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை போன்ற துறைமுகங்களினூடாக யாழ்ப்பாணத்தை வந்தடைந்தன.

இவற்றால் கட்டப்பட்ட கல்வீடுகள் சிதைந்த நிலையில் இன்றும் காணப்படுகின்றன. தெல்லிப்பளை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை முதலிய பகுதிகளில் இன்றும் அதன் எச்சங்களை காணமுடிகின்றது.

ஐரோப்பிய வருகையை ஒட்டி யாழ்ப்பாண வீட்டுகட்டிட அமைப்பிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. இயற்கையை கருத்தில் கொண்டு வீடுகள் அமைக்கப்பட்டிருந்தன. ஒற்றுமைக்கும் பாசத்திற்கும் எடுத்துக்காட்டாக நாற்சாரும் வீடுகள் அமைக்கப்பட்டன. பல குடும்பங்கள் ஒற்றுமையாக ஒன்றாக வாழ்ந்ததற்கு இது எடுத்துக் காட்டாகும். நான்கு பக்க வாசல்களும் நடுவில் முற்றமும் அமைக்கப்பட்டிருந்தன. வீடுகளின் கதவுகள் மரவேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாண வீடுகளின் பின்னணியில் சமூக பொருளாதார கட்டமைப்பு எவ்வளவு செல்வாக்கு செலுத்துகின்றது என்பதை அறியக்கூடியதாக அமைகின்றது. இத்தகைய வீட்டு அமைப்பு தற்போது அருகிச்சென்று விட்டது. சாந்து, சுண்ணாம்பு கொண்டு கட்டப்பட்ட வீடுகள் கல்வீடு என்றே அழைக்கப்பட்டன. அக்காலத்தில் கல்வீடுகள் மிகவும் அரிதாகவே காணப்பட்டது. பொருளாதார வளம் கொண்ட மேற்தட்டு மக்களே அதிகளவில் கல் வீட்டில் வாழ்ந்தனர்.

நூறு நூற்று ஐம்பது வருட பழமை வாய்ந்த இந்த வீடுகள் இடப்பெயர்வுகளோடு பாழடைந்து போயின.





காலப்போக்கில் சீமெந்தின் வருகையும் வீடுகளின் அமைப்பு முறையில் மாற்றத்தை ஏற்படுத்தின. யாழ்ப்பாணத்தில் ஒரு காலத்தில் நிலவிய சமூகப் பொறுப்பிற்கு திண்ணைகள் சாட்சிகளாய் அமை கின்றன. இங்குள்ள பாணிகளின் வீடுகளை ஒல்லாந்தர் ஆங்கிலேயர் பாணி வீடுகள் என்று கூறும் வழமையும் உண்டு. வீட்டு வளவின் வாசலிற்கு கேற் அமைக்கப்பட்டிருக்கும். இக் கேற்றினை மூடி கூரை அமைக்கப்பட்டிருக்கும். இது வழிப்போக்கர்கள் இளைப்பாறிச்செல்லும் இடமாகவும் அமைந்திருந்தன.

இந்த நாற்சார வீட்டின் வரவேற்பு அறையின் சுவர்களில் மரத்திலான மான் உருவங்கள் தொங்க விடப்பட்டிருக்கும். நான்கு பக்கமும் விறாந்தை அமைக்கப்படும்.



யாழ்ப்பாணத்தில் வீடு அமைப்பு முறைமை கால த்திற்கு காலம் மாற்றமடைந்து வருகின்றது. வீட்டினை பராமரிப்பதற்கு ஏற்றவகையில் தமக்கு அளவான வீட்டினை அமைத்து வருகின்ற போதும் பழமை வாய்ந்த வீடுகளை சிலர் இன்றும் பராமரித்து வருகின்றனர். சபை சந்திக் குரிய வீட்டினை கட்டவேண்டும் என்ற எண் ணம் சிலர் மனதில் இருந்து கொண்டு தான் இருக்கின்றது.

முருகாந்தினி.எஸ்






~ஈழத்து இசை நாடக வரலாற்றில் புதியதொரு முயற்சி~

# கண்டனன் சீதையை....

நீண்ட இடைவேளைக்குப்பின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு நாடகத்தைக் காண நிறைந்திருந்தது. யாழ்ப்பாணத்தில் இன்று நாடகத்துறை ஒரு வகையான 'தறுக்கணிப்பு' நிலையை அடைந்திருப்பது யாவரும் அறிந்த ஒன்று. 'நாடகம் மெல்லச் சாகுமோ' என்று எண்ணி ஏங்கி தவிப்போருக்கு நாடக அரங்கக் கல்லூரி தனது முப்பத்து மூன்றாவது ஆண்டு நிறைவில் ஒரு புது விருந்து தந்திருக்கிறது. இராம நாடகப்பாடல்களைத் தொகுத்து இசை நாடகமொன்றைத் தந்திருக்கிறார்கள்.

இந்த புது முயற்சிக்கு மூல கர்த்தர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத் துறை விரிவுரையாளர் த.றொபேட் மற்றும் ஈழத்தின் நவீன நாடக உலகில் தாய் எனப்போற்றப்படும் கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் அகியோர். பல்வேறு துறைசார்ந்நதவர்களுடன் இணைந்து தற்புகழ்ச்சியின்றி செய்கின்ற பணிக்கு இந்த கலை முயற்சியை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இந்த இசை நாடகத்தை விமர்சித்தல் என்பதற்குமாறாக இதை புரிந்து கொள்ளல் என்ற தளத்திலேயே பார்க்க வேண்டுமென்று நினைக்கிறேன். கடந்த ஒரு வருடகாலமாக இசைத்துறை விரிவுரையாளர் த.றொபேட் மிகப்பொறுமையுடன் இசைப்பயிற்சியை வழங்கி நாடகத்தை மேடையேற்றியிருப்பது, இன்றும் அர்ப்பணிப்புடன் கலை படைப்போர் இருக்கிறார்கள் என்பதற்கான சான்றாகக் அமைகின்றது. நீண்ட பயிற்சிகளினூடாக பாடல்களையும் மெட்டுக்களையும் தம்முள் ஏற்றி ஊறித்திளைத்து மேடையேற்றுவது தான் ஒரு கலை காலத்துள் நீண்டு நிலைப்பதற்கான வாய்ப்பை கொடுக்கும். உண்மையான கலைக்கையளிப்பு நடைபெறும்.



பரீட்சைகளுக்கும், பட்டங் களுக்கும், திட்டங்களுக்கும், புகழுக்கும் செய்கின்ற கலைப் படைப்புக்களில் நிலைத்த தன்மையையோ கலைக் கையளிப்பையோ எதிர்பார்க்க முடியாது.?

இனி இந்த படைப்பு ஏன் முக்கியம்? பெறுகின்றது என்பதை பார்க்கலாம். இராமாயணம் இசைநாடக வடிவில் ஈழத்தில் இதுவரை ஆடப்படவில்லை இப்போ புராணகதைகளை பேசி வந்த இசைநாடக மரபில் இதிகாச கதை உள்வாங்கப்பட்டிருக்கிறது.

இசை நாடக மரபை அடியொற்றி அதே வேளை நாடகத் தன்மையையும் உள்வாங்கி கண்டனன் சீதையை' நாடகம் தயாரிக்கப் பட்டுள்ளது.

வழமையில் இசை நாடகம் என்று அறியப்பட்டாலும் இந்த மரபில் நாடகம் மிகக் குறைவாக வும் இசை மேலோங்கியுமே காணப்படுவது வழமை. இங்கு நாடகமென்று குறிப்பிடுவது நடிப்பு, மேடை அசைவுகள், மேடைப் பயன்பாடு பாத்திர உருவாக்கம், காட்சிப்புனைவு போன்றவற்றை குறிப்பிடலாம்.

வி.வி.வைரமுத்து தன் இயலாற்றலுக்கு ஏற்ப இசை நாடகங்களுக்குள் நாடகப் பாங்கை சேர்த்தார் என்றாலும் குறிப்பாக நடிப்பை சேர்த்தார் என்றாலும் அது பின்னாளில் தேய்வடைந்த வெறும் பாடல் களாக மட்டுமே எஞ்சியிருக்கிறது.



இதிலும் "சாஸ்திரிய சங்கீதம் தொலைந்து போய் மேடையில் சுருதியும் தாளமும் இல்லாமல் பாடுகின்ற நிலை வந்து விட்டது" என்ற றொபேட்டின் குற்றச்சாட்டு இங்கு நீண்டு நோக்கத்தக்கது. தான் வைத்த குற்றச்சாட்டை றொபேட் தானே நிவர்த்தி செய்ய முற்பட்டிருப்பதன் விளைவே இந்த இசை நாடகம். வெறும் விமர்சகர்களாக தாம் விழுங்கிய கோட்பாடுகளின் வில்லங்கங்களுடன் விக்கி தவிக்காது. தங் ஏனையோரின் மீது வைத்த விமர்சனத்தை தீர்க்க முயற்சித்த செயற்பாட்டாளராக றொபேட் திகழ்ந்திருப்பது சிறப்பான விடயம் பாராட்டுதலுக்குரியதும் கூட.

ஆண்டாண்டு காலம் நாம் அறிந்த இராமர் கதை மேடையில போடப்பட்ட போது புரிந்து கொள்வதற்கு எந்த சிக்கலும் பார்வையாளருக்கு இருக்கவில்லையென்றே நினைக்கிறேன். பாத்திரங்கள் ஏலவே அறியப் பட்டதன் காரணமாக அவை மேடையில் தாமாகவே வாழ்ந்தன. தசரதன் இறந்த செய்தியறிந்து மேடையில் நின்ற இராமன் அழுவதற்கு முன்பாக மண்டபத்தில் கூடியிருந்த பார்வையாளர் கண்ணீர்விடத் தொடங்கி விட்டனர். பின் நடுமேடையும் முன் இடது மேடையும் பிரதான களங்களாகின. அங்கு போடப்பட்டிருந்த இருக்கை பலாது சிம்மாசனமாகவும் காணப்பட்டது சிறப்பானது. ராமன் வில்லை ஆர்பனகை தொட்டு தடவி இராமனாக உருவகித்த பாங்கு நன்றாக இருந்தது. ஒரு தளம் பல்வேறு களங்களாக மாறிய விந்தை பார்போரின் இயல்பான புரிதலுக்கு உதவியதுஎன்பது நாடகத்தின் வெற்றியே .



ஆடைகளில் காணப்பட்ட எளிமை நாடகத்துக்கு செறிவைக் கொடுத்தது. இத்தனை நல்லவற்றையும் ஒருமுகமாக சுவைப்பதற்கு தடையாக இருந்தவை ஒளியமைப்பும் ஒலியமைப்பும் என்பதையும் சொல்லியாக வேண்டும். ஒலியமைப்பின் கோளாறுகளால் பாடல்களை அனேக இடத்தில் சீராக கேட்க முடியவில்லை. இது எரிச்சலையூட்டியது.அதே போன்று பல நேரங்களில் நடிகர்களில் அற்புமான முக வெளிப்பாடுகளை ஒளியமைப்பின் கோளாறுகளால் சீராகப் பார்க்க முடியவில்லை மேலும் மெருகு பெற வேண்டும். இந்த புதிய முயற்சி சிறப்பானது என்பதற்கு மேலாக எமது பாரம்பரிய இசை நாடகங்களில் காணப்படுவதான மனதைத்தொடும் பாடல்களை இந்த நாடகத்தில் காணவில்லை யென்பது ஒரு நெருடலாக இருந்தது சில வேளைகளில் அதற்கு இதில் பரீட்சயப்பட வேண்டுமோ தெரியவில்லை மேலும் காட்சிப் படிமங்களாகப் பார்க்கும் போது மேலும் செழுமைபெற வேண்டுமென்றே தோன்றுகிறது இன்னும் நாடகமாக வேண்டும் பாடல்களின் உச்சரிப்பு தெளிவு மேலும் செழுமை பெற வேண்டும் என்ற எதிர்பார்ப்புக்கள் இருந்தாலும். இரண்டரை மணி நேரம் பார்வையாளர்களை எந்த சலசலப்புமின்றி பற்றி பற்றி வைத்திருந்தளவில் இது பெரு வெற்றியான புது முயற்சியென்றே சொல்லலாம். நீண்ட உழைப்பின் பயனாக வந்த அந்த அறுவடையை ஒரு இரு மேடைகளோடு மட்டும் நிறுத்தி குலைந்து போக விடாமல் பல நூறு இடங்களில் மேடையேற்றி இதன் உச்ச வடிவத்தை அடைய வேண்டியது படைப்பாளிகளின் பணியாக நீண்டு கிடக்கிறது.

தே.தேவானந்த்

# வீரமாகாளியில் வீரவாள்

வீரத்துடன் இறுதி வரை வாழ்ந்து வீரத்தின் விளைநிலமாக திகழ்ந்து எல்லோர் மனங்களிலும் இடம் பிடித்த யாழ்ப்பாணத்தின் இறுதி மன்னனான சங்கிலியமன்னனின் வாள், வீரத்தின் தெய்வம் என்று போற்றி வணங்கும் நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயிலில் காணப்படுகின்றது.

1519ம் ஆண்டு சங்கிலிய மன்னன் யாழ்ப் பாணத்துக்கு அரசனான காலம் தொடக்கம் யாழ்ப்பாணத்துடன் போர்த்துக்கேயரை தொடர் பினை மேற்க்கொள்ள விடவில்லை என்பது வரலாற்று உண்மை. 1620ம்ஆண்டு போர்த்துக் கேயர் யாழ்ப்பாணத்தின் மீது படை எடுத்தனர். இந்தப்படையெடுப்பை அன்று சங்கிலிய மன்னனே எதிர் கொண்டான். சங்கிலியன் என்ன தான் கொடுங்கோல் ஆட்சி செய்தாலும் போர்த்துக்கேயரை கடைசி வரை எதிர்த்து நின்றவன் என்பதில் இவன் போற்றப்படுகின்றான். ஆரம்பத்தில் இருந்தே போர்த்துக்கேயருடனான தொடர்பை துண்டித்தான். போர்த்துக்கேயர் 1505ம் ஆண்டு கோட்டை ராசதானிக்கு வந்தாலும் 1543ம் ஆண்டே யாழ்ப்பாணத்துடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முடிந்தது என்றால்



சங்கிலிய மன்னனின் வீரத்தினை சொல்லிக் கொள்ள வார்த்தைகள் கிடையாது.

சங்கிலிய மன்னனுக்கும் வீரமாகாளி அம்மன் கோயிலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. சங்கிலிய மன்னன் போருக்கு செல்லும் போது வீரமாகாளி அம்மன் கோவிலுக்கு சென்று அம்மனை தரிசித்து போருக்கு சென்றதாகவும் எல்லா போரிலும் வெற்றி பெற்றதாகவும் கூறுகின்றது வரலாறு. வீரமாகாளி அம்மன் கோயிலும் சிறப்பு மிக்கது. இக் கோயிலில் நடந்த சுவாரஸ்மான கதை கோயிலின் பெருமையினை எடுத்துக் காட்டும்.

ஒரு காலத்தில் பறங்கியர் கோயில்களை எல்லாம் அழித்துக் கொண்டு இருந்த சமயம் இக் கோயி லையும் அழிப்பதற்கு சென்ற வேளை ஆலய முகப்பில் சிங்கம் ஒன்று தோன்றி சடை விரித்துக் கர்ஜித்து பறங்கியரை விரட்டி அடித்து மறைந்து ள்ளது. இதனால் இக் கோயிலுக்கு மக்களை பறங்கியர் விடவில்லை என்பது இக் கோயிலுக் கான பதிவுகள்.

இன்றும் இக் கோயிலில் சங்கிலிய மன்னனின் வாள் காணப்படுகின்றது என்பது எத்தனை பேருக்கு தெரியும்.? சங்கிலிய மன்னன் போருக்கு செல்லும் முன்னர் இக் கோயிலுக்கு வந்து அம்மனை வழிபட்டு யுத்தகளத்துக்கு செல்வது வழக்கம். அவ்வாறு யுத்தகளத்துக்கு செல்லும் முன்னர் கோயிலுக்கு வந்து வணங்கும் போது இரண்டு வாள்களை விட்டு சென்று விட்டதாக வரலாறு சொல்கின்றது. அந்த வாள்களில் ஒன்று தற்போது இக் கோயி லில் இருக்கின்றது. · இரண்டு வாள்களில் ஒரு வாள் பற்றிய தகவல் தெரியாம லேயே உள்ளது.



இது தொடர்பாக இவ் ஆலய குருக்கள் தெரிவிக்கையில் 'மாமன்னன் சங்கிலியனின் வாள்கள் இங்கு இருந்தது. ஒரு வாள் இன்றும் இருக்கின்றது ஆனால் மற்றைய வாளை விடுதலைப்புலிகள் தமிழீழ அருங்காட்சியகத்தில் வைப் பதற்கு என்று


காரணம் கூறி எடுத்துச் சென்று விட்டார்கள். அவர்கள் கொண்டு சென்ற வாள்தான் மிகவும் பழமையானது. எமது மூதாதையர்கள் பழைய வாளை கோயிலுக்கு வைத்துவிட்டு மற்றைய வாளை கொண்டு செல்லும்படி கூறியுள்ளனர். ஆனால் அவர்கள் கேட்கவில்லை. பழமையான வாளே தமக்கு வேண்டும் என்று எடுத்துச் சென்று விட்டனர். தற்போது அந்த வாள் பற்றிய தகவல்கள் எதுவும் இல்லை. இருக்கிறதா? என்று தெரியாது. மிகவும் பழமை பொருந்திய பொக்கிஷமாக பேணப்பட வேண்டிய அந்த வாள் இன்று எம்மிடம் இல்லாதது கவலையளிக்கின்றது என்று தெரிவித்தார்

சங்கிலிய மன்னன் பயன்படுத்திய வாள் இக் கோயிலில் மிகவும் பாதுகாப்பாக உள்ளது. வருடத்தில் ஒரு தடவை மகோற்சவ காலத்தில் வாள் வெட்டு திருவிழாவின் போது மட்டுமே இந்த வாள் வெளியே எடுக்கப்படுவது கோயில் மரபாக பேணப்படுகின்றது. ஆலயக்குருக்கள் மட்டுமே வாளினை எடுத்து பயன்படுத்துவர்.

அத்தகைய வாள் ஒரு சில நிமிடங்கள் என் கையில் இருந்தது என்று நினைத்தாலும் இன்று மெய்சிலிர்க்க வைக்கின்றது. சங்கிலிய மன்னன் வாளை எவ்வாறு தூக்கி உபயோகித்திருப்பார் என நினைக்கத் தோன்றியது. அந்த அளவுக்கு வாள் நீண்டதாகவும் பாரமானதாகவும் காணப்படுகின்றது.

எத்தனையோ வருடங்கள் பழமையான இக் கோயிலில் மாமன்னன் சங்கிலியனின் வாள் இன்று மட்டுமல்ல என்றும் பாதுகாப்பாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

சி.சுகனியா






# மீள்குடியேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் கண்ணிவெடிகள்

வட, கிழக்கில் இன்று யுத்தம் ஓய்ந்து சமாதானம் பிறந்திருந்தாலும், யுத்தப் பிரதேசவாழ் மக்கள் தமக்குரிய இடத்திற்கு நினைத்த மாத்திரத்தில் செல்வது என்பது இன்றுவரை கஷ்டமான காரியமாகவே உயுள்ளது. யாரோ யாருக்கு வைத்த கண்ணிவெடிகள் இன்று யாரின் குடியேற்றத்துக்கோ இடைஞ்சலாக இருக்கின்றது.

இராணுவத்தினரினதும், ஏனைய கண்ணிவெடியினை அகற்றும் அமைப்பினரின் பாரிய ஒத்துழைப்புடன் இன்று வட, கிழக்குப் பிரதேசங்களில் இதன் தாக்கத்திலிருந்து விடுபடுவதற்கான திட்டங்கள் செயற்ப்படுத்தப்படுகின்ற போதிலும் அதிகமான சிறுவர்களும், பெண்களும் இவற்றின் பாதிப்பிலிருந்து இன்னும் விடுபடுவது இயலாததாகவே உள்ளது. மழை வீட்டும் இன்னும் தூவானம் ஓயாதநிலையில் கண்ணிவெடி பற்றிய கல்வி மற்றும் விழிப்புணர்வுகள், எச்சரிக்கை மையங்கள், அடையாளங்கள், எல்லைப் படுத்தப்பட்ட பிரதேசங்கள் என்று எவ்வளவுதான் முயன்றாலும் சிலவேளைகளில் அதன் தாக்கத்திற்குட்பட்டே வரமுடிகின்றது.

ஐ.நா. அமைப்பினது விசேட அறிக்கை சிறுவர்களே மிதிவெடிகளினால் அதிகம் பாதிக்கப்படுவதாக கூறுகின்றது. அதேநேரம். இக்கண்ணிவெடி ஒன்றின் கொள்வனவு செலவாக சுமார் 1,200 ரூபாவாக காணப்படுகின்றது. இதனை அகற்றுவதற்காக சுமார் 1,15,000 ரூபா வரையில் செலவு செய்யப்படுவதாகவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கண்ணிவெடி பற்றிய கல்வி இன்று மாணவர்கள் மத்தியில் பிரசாரம் பண்ணப்பட்டு வருகின்றது. மாணவர்களின் விளையாட்டுத் தனத்தினால் எதிர்கால வாழ்வு சூன்யமாகி விடக்கூடாது என்பதற்காகவே இவைபற்றிய முழுமையான அறிவு பாடசாலை மட்டத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது.

வானொலி, பத்திரிகை போன்ற தொடர்பு சாதனங்கள் எவ்வாறுதான் கண்ணிவெடி அபாயத்தை கூறி நின்றாலும் நாளாந்தம் மக்கள் பாதிக்கப்பட்டே வருகின்றனர்.

இக்கண்ணி வெடிகள் நமது நாட்டில் மட்டுமல்ல உலகின் பலநாடுகளில் பெரியதோர் அச்சுறுத்தலாகவே காணப்படுகின்றன. அதனால் தான் நிலக்கண்ணிவெடிகள் அற்ற உலகத்தை தோற்றுவிப்பதற்கு உலக மட்டத்திலான ஒன்று கூடல்களும், அறிக்கைகளும் பல வெளியீடுகளும் நிகழ்த்தப்பட்டு





வருகின்றன. அந்தவகையில் அண்மையில் கொலம்பியா நாட்டில் நடைபெற்ற 'கார்டகெனா' மாநாட்டில் செய்து கொள்ளப்பட்ட ஒரு உடன்படிக்கையில் இதிலிருந்து விடுதலை அடைவதற்கு 5 ஆண்டுகள் கொண்ட திட்டமொன்றின் வரைபுக்கு அங்கீகாரம் வேண்டி நின்றது. அதாவது மனிதர்களுக்கு எதிரான நிலக்கண்ணிகள் தடுப்பு மீதான உடன்படிக்கையின் பிரகாரம் கண்ணிகளை அகற்றுதல், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுதல், மீதமுள்ள சகலவிதமான கண்ணிகளையும் அழித்துவிடுதல் என்பனவற்றுக்காகவே இவை முன்வைக்கப்பட்டன.




10 வருட அமுலாக்க ஒப்பந்தம் முடிவடைந்தும் இன்னும் நிலக்கண்ணி வெடிகளினால் மக்கள் பாதிக்கப்பட்டும், உயிர் பிழைத்தவர்கள் வாழ்வதற்கான நம்பிக்கை இழந்துமுள்ள நிலையில் திட்டத்தை அமுல்படுத்தியதில் தவறியுள்ளதையே சுட்டிக்காட்டி நின்றன என்று கருத்துத் தெரிவித்திருந்தார் சர்வதேச செஞ்சிலுவை அமைப்பின் உபதலைவரான கிறிஸ்டின் பீர்லிர். உண்மையில் கடந்த ஒரு தசாப்த காலத்தில் மாத்திரம் கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக 4 பில்லியன் அமெரிக்க டொலர்களை செலவு செய்துள்ளதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

உலகளாவிய ரீதியில் சுமார் 44 மில்லியன் கண்ணிவெடிகள் அப்புறப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மீதமான வெடிக்காத நிலையிலும், வெடிக்கக் கூடிய நிலையிலும் பல மில்லியன் கணக்கான கண்ணிவெடிகள் நிலத்தில் உள்ளன. இவ்விதமான கண்ணிவெடிகளை அகற்றி மக்களை அனர்த்தத்திலிருந்து பாதுகாப்பதற்கான சர்வதேச ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதிலிருந்து அமெரிக்கா தப்பிக்கொண்டு வருகின்றது.

ஒட்டாவா உடன்படிக்கையில் கைசாத்திட்டுள்ள பலநாடுகள் இதுவரையிலும் கண்ணிவெடிகளை அகற்றுவதில் தீர்க்கமான ஒருமுடிவினைக்கூட எடுக்கவில்லை என்றே கூறப்படுகின்றது.

இது இவ்வாறு இருக்க, யுத்த நடவடிக்கை முடிவுற்றதன் பிற்பாடு மக்களின் வாழ்வியல் துன்பங்கள் ஓரளவு குறைந்திருந்தாலும் மீள் குடியேறிய மக்கள் மீள்குடியேற்றப் படாத மக்கள் என பிரிக்கப்பட்டு அவர்களும் மிகவிரைவில் குடியேறி விடுவார்கள் என்ற செய்திகளை அரசு கூறிக்கொண்டு வந்தாலும் மக்கள் இயல்பு வாழ்க்கை நிலைக்கு திரும்பாமைக்கு காரணம் இக்கண்ணி வெடிகளே என்று அரசாங்கம் கூறிவருகிறது.


அண்மையில் இலங்கை வந்த இந்திய பாராளுமன்ற எம்.பி.க்களிடம் கடந்த ஜூன் மாதமளவில் எல்லோரும் மீள்குடியேற்றப்படுவார்கள் என்று கூறப்பட்டது.

ஆனால், அவர்கள் இன்று வரை மீள்குடியேற்றப்படவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்த போது, மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், மக்களின் மீள்குடியேற்றத்துக்கும், புனர் வாழ்வுக்கும் இந்த கண்ணிவெடிகள் தான் தடையாக இருப்பதாக செய்திச் சேவை ஒன்றுக்குத் தெரிவித்தார்.

யுத்த பிரதேசங்களில் சுமார் 1.5 மில்லியன் மிதிவெடிகளும் வெடிக்காத பொருட்களும் சுமார் 40 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் பரவிக் காணப்படுகின்றன. இந்நிலைமைகளை கருத்தில் கொண்டு மீள்குடியேற்றத்தை துரிதப் படுத்துவதற்கான ஆரோக்கியமான வழிமுறை களை கண்டறிந்து உரியவர்கள் செயற்பட வேண்டும் என்பது அனைவரதும் எதிர்பார்ப்பு ஆகும்.

– ஏ.ஜே.எம். பிறவ்ஸ
நவமணி பத்திரிகை

உலகின் எந்த ஒரு மூலையிலும் என்ன நிகழ்வு நடந்தாலும் அதனை மக்கள் மத்தியில் கொண்டுபோய் சேர்ப்பது என்னவோ ஊடகங்கள்தான். இந்த ஊடகங்களால் செய்ய முடியாத காரியம் என்று ஒன்றுமில்லை எனும் நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது.சில சமயங்களில் ஒரு நாட்டின் அரசியல் நிலைமைகளை மாற்றி அமைக்கும் தன்மை கூட இந்த ஊடகங்களிற்கு உண்டு.




இருப்பினும் உண்மைத் தன்மையை ஆராயமுற்பட்டால் இது ஒரு ஆரோக்கியமான விடயமாகக் கூறமுடியாது. ஏனெனில் ஊடகங்கள் மக்களிற்கு செய்தியை வழங்கவேண்டுமே தவிர தலைமை வகிக்கும் தன்மையையோ அல்லது அரசியலை தீர்மானிக்கவோ முடியாது. எந்த ஒரு நிலைமையிலும் தெரிவிப்பது ஊடகங்களாக இருக்க வேண்டும்.தீர்மானிப்பது மக்களாக மட்டுமே இருக்க வேண்டும்.

# ஊடக தர்மம் ..!!! பெயரளவில் மட்டுமா?


ஆனால் இன்று நாட்டில் எத்தனை அரசியற் கட்சிகள் உள்ளனவோ அத்தனைக்கும் தனியாக ஊடக அமைப்பு இருக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் ஒவ்வொரு ஊடகமும் தான் சார்ந்த கட்சியை வளர்க்க படாதபாடு படுகின்றன. இவை பத்திரகை, தொலைக்காட்சி,வானொலி மட்டுமல்லாது இணையத்தள ஊடகத்தையும் உள்வாங்கி உள்ளது. இன்று ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இணையத்தளம் புதிதாக ஆரம்பிக்கப்படுகின்றது. குறித்த சில இணையத்தள உரிமையாளர் தமக்கு என்னவெல்லாம் தோன்று கின்றதோ அதனை எல்லாம் வெளியிடுவார்கள். இதனால் இணையத்தளங்கள் தொடர்பாக மக்கள் மத்தியில் வருகின்ற பாதகமான எண்ணங்கள் ஒட்டு மொத்த இணையத்தளங்களையும் பாதிக்கும். இதனை என்னவென்று கூறுவது?

எவ்விதமாக ஊடக அறங்களையோ அல்லது நடைக் கையேடுகளையோ பின்பற்றாமல் தனது தனிப்பட்ட கோபதாபங்களையும் தாம் சார்ந்த அரசியலை வளர்த்துக் கொள்வதையும் மட்டுமே நோக்கமாகக் கொண்டு சில இணையத்தளங்கள் செயற்பட்டு வருகின்றன.

அனைவரும் நமது அடுத்த கணத்தை சிந்தித்துப் பார்க்க முன்னர் எமது நாட்டில் ஆரோக்யமான ஊடக நிலைமை ஏற்பட என்ன செய்ய வேண்டும்? என ஒரு கணம் சிந்திக்க வேண்டும்.

குறித்த ஒரு ஊடக நிறுவனம் குறித்த ஒரு செய்தியை பிரசுரிக்கின்றது என்றால் அதற்கு எதிரான வழியில் இன்னுமொரு ஊடக நிறுவனம் செய்தி வெளியிடுவது இன்று வழமையாகிவிட்டது.

இத்தகைய நிலைமைக்குள் இணையத்தளங்களும் நுழைந்துள்ளன.ஒரு ஊடகத்திற்கு அறமாக தெரியும் விடயம் இன்னுமொரு ஊடகத்திற்கு ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு விடயமாக காணப்படுகின்றதுதான் உண்மை. ஒவ்வொரு அரசியல் அமைப்புக்களும் ஊடகநிறுவனங்களை வைத்திருப்பது தவறல்ல. மாறாக -தாம் சார்ந்த கட்சிக்கு ஏற்றவாறு ஊடக அறங்களை மாற்றியமைப்பது சரியாகுமா?






குறிப்பாக தமது அரசியற் பிரச்சனைகளுக்குள் மக்களை சிக்கவைத்து மக்கள் தீர்ப்பு என்ற போர்வையில் தமது சொந்தக்கருத்துக்களை வெளியிடுதல், ஒருவருக்குத் தெரியாமல் அவர் நடத்தைகளை மற்றும் கூறியதை ஒலி, ஒளிப் பதிவு செய்தல்,அதனை அவரது அனுமதி இல்லாமல் வெளியிடுதல் இவை ஊடக அறத்திற்கு அப்பாற்பட்டவிடயமாகும்.தாம் சார்ந்த வட்டத்திற்குள் அரசியல் நடத்து பவர்கள் மேடைகளில் மட்டும் ஜனநாயகம் குறித்துப் பேசுகிறார்கள்.அதனை தம்மைச் சார்ந்திருக்கும் ஊடகங்களில் தமக்குச் சார்பாகவே வெளியிடுகிறார்கள்.அது தவறு என வேறு ஊடகங்களால் சுட்டிக்காட்டும் பட்சத்தில் அந்த ஊடக நிறுவனத்தை சேர்ந்த ஊடகவியலாளர் கள் தாக்கப்படுகின்றார்கள் அல்லது அச்சுறுத்தப் படுகின்றார்கள்.

ஊடகங்களுக்கிடையில் எத்தனையோ கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் அதற்காக ஊடக ஒழுக்கவிதிகளை மீறக்கூடாது.
குறித்த ஒரு ஊடகத்திற்கும் மற்றைய ஊடகங் களுக்கும் இடையிலான போட்டித்தன்மையை வெல்வதற்காக ஊடகங்களை பயன்படுத்துவது ஏற்றுக்கொள்ள முடியாது.
அரசியல் கட்சிகள் தமது கருத்துகளை வெளியி டுவதற்கு தனித்துவமான ஊடகங்களை பயன்ப டுத்தி ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுவதையே நோக்கமாக கொண்டுள்ளனர். இவ்வாறான செயற்பாடுகளை விடுத்து ஊடகங்கள் மக்களுக் காக செயற்படும் போது ஊடக தர்மமும் நிலைத்து நிற்கும்.
ஊடகவியலாளர்கள் ஊடகத்தை மதிக்கக் கற்றுக்கொண்டால் ஏனையோரும் பின்பற்றுவர். எச்சந்தர்ப்பத்திலும் ஊடக அறத்திற்குள் செய்திகளை வெளியிட்டால் ஆரோக்கியமான ஊடகங்களை எமது நாட்டிலும் உருவாக்க முடியும்.

நட்சா.ஜோ



# நீலகிரியின் பழங்குடியினர்...



ஊட்டி மலைக்குச் சென்று அங்கு வாழும் பழங்குடி மக்களைச் சந்தித்து அவர்களுடைய தற்போதைய நிலைமை பற்றிக் கலந்துரையாடும் வாய்ப்புக் கிட்டியது. இரு இன மக்களைச் சந்தித்தேன்

உதக மண்டலம் என்ற பெயருக்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன 'ஒத்தைக் கல் மந்து' என்ற பெயரே உதக மண்டலம் ஆயிற்று என தோதாவர் சொல்கின்றனர். மூங்கில் காடு இருந்ததாலும் நீர் அதிகம் இருந்ததாலும் இப்பெயர் பெற்றது என பலரும் உரைக்கின்றனர். ஊட்டி என்றும் உதகை என்றும் அழைக்கப்படும் உதகமண்டலம் , தென்னிந்திய மாநிலமான தமிழகத்தில் நீலகிரி மலையில் அமைந்த ஊராகும்.

இதுவே நீலகிரி மாவட்டத்தின் தலை நகரமுமாகும். இது கடல் மட்டத்திலிருந்து 7347 அடி (2239மீ) உயரத்தில் உள்ளதால் மிகுந்த குளிர்மையாக உள்ளது.

இம்மாவட்டம் மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ளது. இம்மலைத்தொடரில் உள்ள நீலகிரி என்னும் மலையாலேயே இம்மாவட்டம் இப்பெயர் பெற்றது.

இங்குள்ள உயரமான மலைமுடி தொட்டபெட்டா ஆகும். குன்னூர் ,கோத்தகிரி, கூடலூர் அரவங்காடு ஆகியன இம் மாவட்டத்தில் உள்ள பெரிய ஊர்கள்.

12–ஆம் நூற்றாண்டில் நீலகிரி மலையில் ஹொய்சாளர்களின் ஆட்சி புரிந்தனர். பின்னர் திப்பு சுல்தானின் மைசூர் இராஜ்ஜியத்தில் ஒரு பகுதி ஆன உதக மண்டலம் 18ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயரின் கைக்குமாறியது. அப்போது கோயம்புத்தூர் மாவட்டத்தின் ஆளுனராக இருந்த ஜான் சல்லிவன் என்பவர் இப் பகுதியின் குளுமையான தட்ப வெப்ப நிலையை விரும்பி இங்கிருந்த தோடர், இடும்பர், படுகர் முதலிய பழங்குடியினரிடமிருந்து நிலங்களை வாங்கினார். ஆங்கிலேயரின் ஆட்சியில் இம்மலைப் பிரதேசம் நல்ல வளர்ச்சியைக் கண்டது. வளைந்து நெளிந்து செல்லும் சாலைகளும் நீலகிரி மலை இரயில் பாதையும் அமைக்கப் பட்டது. இதன் காரணமாக உதகை ஆங்கிலேயருக்கு கோடைக்காலத் தலைநகரமானதுயது. இம்மாவட்டத்தின் மக்கட்தொகை 7,62,141 ஆகும்.அத்துடன் கல்வியறிவு 81.44% ஆகும். இது தமிழகத்திலேயே அதிக கல்வியறிவு பெற்ற மாவட்டங்களுள் ஒன்று. இம்மாவட்டத்தில் பல பழங்குடி இன மக்கள் வசிக்கின்றனர். தோடர் இவர்களுள் குறிப்பிடத் தகுந்தவர்கள். இவர்கள் தவிர பணியர்கள், படகர்கள், பெட்ட குறும்பர், கசவர் ஆகியோரும் உள்ளனர். கோத்தகிரிப் பகுதிகளில் கோத்தர் எனும் பழங்குடியினர் வாழ்கின்றார்கள். இருளர்கள் கீழ்பில்லூர் பகுதியில் வாழ்கிறார்கள்.



தமிழகத்தில் உள்ள குரும்பர், தோடர், கோத்தர், பனியர், காட்டு நாயக்கன், இருளர், காணிகாரன் மற்றும் மலையாளி ஆகிய பழங்குடியின மக்களை உள்ளடக்கி தமிழ்நாடு பழங்குடியின மக்கள் கூட்டமைப்பு என்ற மாநில அளவிலான புதிய அமைப்பும் இவர்களிற்று உண்டு. அவர்களைப் பொறுத்தளவில் தமிழகத்தில் பழங்குடியினர் பட்டியலில் 36 ஜாதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றில் 10 ஜாதிகள் தான் உண்மையான பழங்குடியினர். மீதமுள்ள 26 ஜாதிகள் போலியானவை என்பது தான்.

இவைதவிர 'பழங்குடியினர் ஆய்வு மையம்' மூலம் பழங்குடியின மக்களின் சமூகப் பொருளாதார கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஊட்டி அருகேயுள்ள எம்.பாலடாவில் மத்திய அரசின் ஆதரவுடன் தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகம் சார்பில் 1983ம் ஆண்டு பழங்குடியினர் ஆய்வு மையம் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆய்வாளர்களுக்கும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியருக்கும் பயன்பட்டு வரும் ஆய்வு மையம் மூலம் பழங்குடியின மக்களின் சமூகப் பொருளாதார கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

'பழங்குடி நாதம்' எனும் மாநில அளவிலான பழங்குடியினர் இசை நடன விழா நடத்தப்பட்டு வருவதாகவும் தமிழகத்தின் பல பகுதிகளை சேர்ந்த பழங்குடியின மக்கள் பங்கேற்பதாகவும் கூறப்படுகின்றது. பழங்குடியினமக்கள் தங்களின் தனித்துவமிக்க இசை மற்றும் நடன வடிவங்களை ஒருவருக்கொருவர் அறியவும் கலாச்சார பரிமாற்றத்தை ஏற்படுத்தவும் சமூகத்தில் பொது மக்களிடையே உரிய மதிப்பு மரியாதையை ஏற்படுத்தவும் 'பழங்குடி நாதம்' நிகழ்ச்சி நடத்தப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது தமிழகம் முழுவதிலும் உள்ள அனைத்து பழங்குடியின மக்களின் சமூகப் பொருளாதார கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் பழங்குடியின மக்களின் குடியிருப்பு, அவர்களுடைய வயது, கல்வி, தொழில், ரேஷன் கார்டு, பழங்குடியினர் அடை



யான அட்டை, சாலை வசதி, மின்சார இணைப்பு, கழிப்பிட வசதி பெற்றுள்ளார்களா? என்பன உட்பட அனைத்து விபரங்களையும் பதிவு செய்யமுடியும்.

நாம் அவர்களுடன் கலந்துரையாடிய போது அவர்களின் கல்வித்தரம் பற்றி அறிந்து வியப்படைந்தோம். ஏனெனில், மருத்துவத் துறையைப் படிக்கும் அளவிற்கு அவர்களின் கல்வித்தரம் வளர்ந்துள்ளது. பெண்கள் அமைப்பிலும் இங்குள்ள பெண்கள் தம்மை இணைத்துக் கொண்டு விரைவாக முன்னேறி வருகின்றனர். அவர்களுக்கே உரிய கிராமியப் பாடல்கள் மற்றும் நடன வகைகளை எமக்காக மேடையில் பாடியும் ஆடியும் காட்டினர்.நமது கலாசாரத்தில் உள்ள கோலாட்டம் போன்றே அவர்களது நடன வகையும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மலைப்பிரதேசத்தில் வாழும்'தோட்டா' இன மக்களை அவர்களது வீட்டிற்குச் சென்று சந்தித்தோம். அவர்களது வாழ்வியலில் திருமணம் முக்கிய இடத்தினை வகிக்கின்றது. அவர்கள் தமது மாமன் மகனையோ அல்லது மாமன் மகளையோ திருமணம் செய்யும் முறையை மட்டுமே பின்பற்றி வருகின்றனர். இம்முறையைத் தவிர யாராவது காதற் திருமணம் செய்தால் அவர்களை ஒதுக்கி வைக்கும் நிலை இங்கு காணப்படுகின்றது. இப்படி பலபேரிற்கு நிகழ்ந்துள்ளதாகவும் அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். வேறு பழங்குடி இனத்தவர்களையோ அல்லது வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்களையோ வீட்டிற்குள் சேர்க்காத வழக்கத்தையும் கொண்டுள்ளனர்.

நமது கலாசாரத்தில் மனைவி கணவனின் காலில் விழுந்து ஆசி பெற்றுக்கொள்ளும் மரபு காணப்படுகின்றது.ஆனால் பழங்குடி மக்களிடையே பெண்களின் தலையில் ஆண்கள் தமது பாதத்தை வைத்து ஆசி வழங்குவதைப் பின்பற்றி வருகின்றனர். இவ்வாறாக நகர்கிறது ஊட்டி பழங்குடி மக்களின் வாழ்க்கை

தட்ஷா.ஜோ



# மாகாண சபை முறைமையும்

# ஆளுநருக்கு உள்ள அதிகாரங்களும்...............

-தகவல் தருனர் குமாரவடிவேல் குருபரன்.
சட்டத்துறை விரிவுரையாளர்
யாழ் பல்கலைக்கழகம்.

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள அரசியல் அமைப்பு முறை 1978ம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இந்த அரசியல் அமைப் பானது ஒற்றையாட்சி முறைக்குரியது. ஒற்றையாட்சி முறையைப் பொறுத்தவில் இதன் கீழ் மத்திய சட்டவாக்கத்துறை, நிறைவேற்றுத் துறை, நீதித்துறை அதிகாரங்கள் போன்றவை உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆனாலும் இவை பகிர்ந்தளிக்கப்பட முடியாதவை என்பது குறிப்பிடத்தக்கது

ஒற்றையாட்சி முறையை மாற்றுவது என்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. அவ்வாறு மாற்ற வேண்டும் எனில் அதற்காக நாட்டு மக்களிடம் தேர்தல் மூலம் சம்மதம் வாங்க வேண்டும். அரசியல் அமைப்புக்குச் செய்யப்பட்ட 13ஆவது திருத்தத்தினூடாக ஏற்பட்டதே மாகாண சபை முறைமை ஆகும்.

இந் நிலையில் மாகாண சபை முறைமை ஆனது ஒற்றையாட்சியை மீறவில்லை எனவும், எனவே 13ஆவது திருத்தத்திற்கு மக்கள் சம்மதம் தேவையில்லை எனவும் இலங்கையின் உயர் நீதிமன்றம் தீர்மானித்தது .

மாகாண சபை முறைமையானது பல சட்டவாக்க அதிகாரங்களைக் கொண்டு காணப்படுகின்றது. அவ்வகையில் மாகாண சபை சட்டமியற்றக் கூடிய விடயங்கள் மாகாண சபை நிரலில் உள்ளன, மத்திய பாராளுமன்றம் சட்டமியற்றக் கூடிய விடயங்கள் மத்திய நிரலில் உள்ளன, மாகாண சபையும் பாராளுமன்றமும் இணைந்து சட்டமியற்றக்கூடிய விடயங்கள் ஒருங்கிய நிரலில் உள்ளன, ஆனால் ஒருங்கிய நிரல் தொடர்பில் மத்திய பாராளுமன்றம் இயற்றும் சட்டம் மாகாண சபை சட்டத்திலும் உயர்வானது (இதன் காரணமாக நடைமுறையில் ஒருங்கிய நிரலும் மத்திய அரசாங்கத்திற்குரியதே),

இந்நிரல்களுள் ஏதேனும் விடயம் ஒதுக்கப்படாத விடத்து அவ்விடயமும் மத்திய அரசின் நிரலுக் குட்பட்ட விடயமாகவே கருத வேண்டும் என ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது போன்றவை காணப்படுகின்றன.

மாகாண சபையின் சட்டவாக்க அதிகாரத்திற்குள்ளான தலையீடுகளும் பாரியளவில் காணப்படுகின்றன என்றுதான் கூறவேண்டும். அவையாவன தேசிய கொள்கை உருவாக்கம் என்ற பெயரில் எவ்விடயம் தொடர்பிலும் (மாகாண சபை நிரல் விடயங்கள் உட்பட) மத்திய பாராளுமன்றம் சட்டமியற்றலாம்.



வெறுமனே ஓர் அமைச்சுச் சுற்றறிக்கை மூலம் கூட தேசிய கொள்கையை உருவாக்கப் படுவதாக உயர் நீதிமன்றத்தால் தீர்க்கப் பட்டுள்ளது. மாகாண சபை நிரலில் உள்ள எவ்விடயம் தொடர்பிலும் பாராளுமன்றம் 2/3 பெரும்பான்மையுடன் சட்டமியற்றலாம். அவசர கால சட்டமொன்றின் மூலமாக மாகாண சபை நிரலில் உள்ள எவ்விடயம் தொடர்பிலும் சட்டமியற்றலாம். மாகாணசபைக் சட்டமொன்றை வலிதற்றதாக்கலாம் போன்றவை மாகாண சபையின் சட்டவாக்க அதிகாரத்திற்குள்ளான அதிகாரங்களாகும்.

இவற்றுடன் மாகாணசபைக்கு ஒதுக்கப்பட்ட விடயங்கள் கூட அரைகுறையாகவே வழங்கப்பட்டுள்ளன உதாரணமாக சுகாதாரம் மாகாணசபை நிரலிற்குள் உள்ளடக்கப் பட்டாலும் போதனா வைத்தியசாலைகள் மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்குள்ளேயே இயங்கும். மருந்துகளை வாங்கும் அதிகாரமும் மத்திய அரசிற்கே உரியதாகும்.

பாடசாலைகள் மாகாணசபை நிரலிற்குள் உள்ளடக்கப்பட்டாலும் தேசிய பாடசாலகள் தொடர்ந்தும் மத்திய அரசாங்கத்தினாலேயே பரிபாலிக்கப்படும். மாகாணசபைக்கு குறித்தொதுக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் மாகாணசபை 'பாராளுமன்றத்தினால் சட்டமொன்றின் மூலமாக வழங்கப்படும் கட்டுப்பாடுகளிற்கு உட்பட்டு' சட்டமியற்றலாம் என்ற வாசகம் பரவலாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. உதாரணமாக கடன் வாங்குதல், சூழல் பராமரிப்பு, கனியவள விருத்தி, (பெரும்பாலான, முக்கியமான) வரிவிதிப்பு. ஆகவே இவை 'மாகாண விடயங்களாக' இருந்தாலும் இவை தொடர்பில் பாராளுமன்றம் சட்டவாக்கம் செய்யலாம் போன்றவையும் மாகாண சபைக்குள் சட்டவாக்கத்தில் தலையீடுகளாகக் கொள்ளப்படுகின்றன.



தொகுப்பு- தட்சா.ஜோ

மாகாண நிறைவேற்றுத்துறையில் ஆளுனரானவர் தன்னகத்தே அதிகாரங்களைக் கொண்டுள்ளார். அவ்வகையில் ஆளுநர் தனது அதிகாரங்களை நேரடியாகவோ அல்லது மாகாண அமைச்சரவையின் மூலமாகவோ அல்லது தனக்கு கீழ்வரும் அதிகாரிகள் மூலமாகவோ செயற்படுத்தலாம். அத்துடன் ஆளுநரானவர் அரசியலமைப்பினால் தனது தற்றுணிவின் பிரகாரம் செயலாற்ற வேண்டிய சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் முதலமைச்சர் அல்லது மாகாண அமைச்சரவை யின் ஆலோசனையின் பெயரிலேயே நடந்து கொள்ளவேண்டும் என்பதும் குறிக்கிடத்தக்கது.

தனது தற்றுணிவின் கீழ் உள்ள அதிகாரங்கள் எவை? எனத் தீர்மானிக்கும் தற்றுணிவு அதிகாரம் ஆளுநருக்குண்டு. அதுமட்டுமன்றி மாகாண சபையின் பொது உத்தியோகஸ்தர்கள் அனைவரையும் நியமிக்கும், இடம்மாற்றும், பதவி விலக்கும் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் ஆளுநரிடத்து வழங்கப்பட்டுள்ளமை ஆனது ஆளுநருக்குள்ள சிறப்பு அதிகாரமாகும். ஆளுநர் விரும்பினால் இவ்வதிகாரங்களை மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு கையளிக்கலாம் என்பதுடன். ஆளுநரே மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவிற்கான உறுப்பினர்களை (மூவர்) நியமிப்பார் என்பது குறிப்பிடத்தக்கது..

மாகாண சபையில் நிதி சம்பந்தமான எந்த மசோதாவையும் ஆளுநரின் பரிந்துரையின்றி அறிமுகப்படுத்த முடியாது என்பதுடன் மாகாண நிதியத்திலிருந்து செலவினத்தை ஏற்படுத்தக் கூடிய எந்தவொரு மசோதாவும் ஆளுநரின் பரிந்துரையின்றி அறிமுகப்படுத்த முடியாது என்பது முக்கியமானது.

இவற்றுடன் மாகாண சபையால் நிறைவேற்றப் படும் எந்தவொரு சட்டத்தையும் நிறைவேற்றும் அதிகாரத்தை ஆளுநர் (மத்தியில் அரசாங்கத்தின் மேற்பார்வையிலும் கட்டுப்பாட்டிலும் இயங்கும்) பிரதேச செயலாளர்களிடம் வழங்கலாம். அரசியலமைப்பை வேண்டுமென்றே மீறியமைக்காக, இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டொன்றின் பெயரில் அல்லது ஒழுக்கக் குறைவான நடத்தைக்காக மாகாண சபை 2/3 பெரும்பான்மையுடன் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி ஆளுநரை நீக்குமாறு பரிந்துரைக்கலாம். ஆனால் இவ்விடயத்தில சனாதிபதியின் முடிவே இறுதியானதாகும் என்பதுவும் மாகாண நிறைவேற்றுத்துறையில் ஆளுனருக்குரிய அதிகாரங்களாகும்.

# அறிவுக்கு விருந்தளிக்கும் ஆவணத் திரைப்படவிழா

ஆவணப்படங்கள், குறும்படங்கள் நாம் நினைப்பதைப் போல் அழிந்து விடவில்லை. அதனை அழியாமல் பாதுகாக்கும் முயற்சியாக அமைவது 'ஆவணத்திரைப்பட விழா'.

இவ்வாறான பல்வேறு ஆவணத் திரைப்படங்களின் காட்சிப்படுத்தல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகவளங்கள் மற்றும் பயிற்சிமையத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அவ்வகையில் இதுவரை ஒன்பது ஆவணத் திரைப்பட விழாக்கள் இடம்பெற்றுள்ளன.







தெரிவுசெய்யப்பட்ட குறுந் திரைப்படங்கள் மற்றும் ஆவணப்படங்களை இந்நிகழ்வில் காட்சிப்படுத்தப்படுவதால் இதனைப் பார்க்கும் மாணவர்கள் மற்றும் ஆர்வலர்களை புதிய கோணங்களில் சிந்திக்கத் தூண்டி அவர்களது சிந்தனைப் பரப்பை விரிவு படுத்துகிறது..

இவ்விழாவில் குறித்த ஒரு நாட்டுத் திரைப்படங்கள் மட்டுமன்றி அனைத்து நாடுகளினதும் தரமான ஆவண மற்றும் குறும் படங்கள் தெரிவு செய்யப்பட்டு ஆங்கில மொழிமூல உப தலைப்புக்களோடு திரையிடப்படுகின்றன.

இவ்வகையில் இதுவரை திரையிடப்பட்டவற்றுள் Leila , KANDAHAR போன்றவற்றுடன் கதை நேரம்' எனும் தலைப்பில் நிலம், ஒருமனசி, முக்கோண காதல் கதை, காத்திருப்பு, காயம், பிரசாதம், தப்புக்கணக்கு, நம்பிக்கை, பொன்னாசை, அம்மா, அப்பா, என் தாம்பத்திய நினைவுகள் மற்றும் Andere Korper, The Big Sellout, Schadeberg Schwarz- weiss, மற்றும் பூம்புகார் போற்றுதல், Fahrenheit nine &eleven Mandela: Son Of Africa ,Father Of A Nation, Burma VJ போன்றவை குறிப்பிடத்தக்கவை.

இதில் Leila என்ற திரைப்படமானது மிகவும் அன்புமிக்க கணவன் மனைவியரிடையேயான கதை. இங்கு மனைவி பிள்ளை பாக்கியம் அற்றவள், கணவனின் தாயார் அவனுக்கு வேறு திருமணம் செய்து வைக்க முற்படுகிறாள் இங்கு இரு வேறு உலகங்களிடையே Leila இழுபடுகிறாள். ஒன்று கணவனுடன் சேர்ந்த குதூகலம். மற்றயது மாமியாரின் கொடுமை புலப்படுத்தப்படுகின்றது.

பாலுமகேந்திராவின் இயக்கத்தில் உருவான 'முக்கோணக் காதற் கதை' குறுந் திரைப்படமானது ஒரு பெண்ணை இரு இளைஞர்கள் காதலிப்பதை வெளிப்படுத்தி நிற்கின்றது. இப்படத்தில் ஒருவருக்குப் பிடிக்காததை திணிக்க கூடாது எனும் அடிப்படை நாகரீகம் புலப்படுத்தப்படுகிறது.

ஆங்கிலத்தில் வெளிவந்த Mandela: son Of Africa Father Of A Nation என்பது ஜொனாத்தன் டெமி என்பவரது தயாரிப்பில் அன்குஸ் கிப்ஸன் மற்றும் ஜோ மெனல் ஆகியோரின் இயக்கத்தில் வெளியான ஆவணப்படமாகும். இது




அக்கடமி விருதுக்கான சிறந்த ஆவணப்படமாக 1997ல் பரிந்துரை செய்யப்பட்டது. அதேபோன்று Burma VJ ஆவணப் படமானது வீடியோ ஊடகவியலாளனைப் பற்றியதாக அமைந்திருந்தது. ஆன்டர் ஸ்ரெகாட் தயாரிப்பில் உருவான இவ் ஆவணத் திரைப்படம் ஊடகத்துறை சார்ந்தோருக்கு பயனுள்ளதாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான அரிய பல ஆவண மற்றும் குறும்படங்களை காட்சிப்படுத்தி வரும் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சிமைய மாணவர்கள் எதிர்காலத்தில் இத் துறையில் சாதிப்பார்கள் என்பதில் ஐயமில்லை

ஜோ. தட்ஷா


# இல்லாத ஒன்றிற்கு எதற்காக தினம்???



சி.சுகனியா

'நூறாயிரம் போர்வீரர்களின் துப்பாக்கி முனையில் செருகப்பட்டிருக்கும் கூர்மையான கத்தியைவிட செய்தித்தாள்களைக் கண்டு நான் பயப்படுகின்றேன்' என்றார் நெப்போலியன்.

இவர் கூறிய வார்த்தைகளுக்கு மாறாக இன்று ஊடகவியலாளர்களைப் பார்த்து பயப்படும் காலம் போய் ஊடகவியலாளர்கள் இந்த உலகத்தில் பயந்தே வாழவேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றனர். இன்று உலகில் அச்சுறுத்தல் மிக்க துறையாகக் காணப்படுவது ஊடகவியல் துறை தான்.



இன்று ஊடகசுதந்திரம் இருக்கின்றது என்று கூறி மே மூன்றாம் திகதி ஊடகசுதந்திரதினம் கொண்டாடப்படுகின்றது.ஆனால் ஊடக சுதந்திரம் என்பது பெயரளவிலேயே மட்டும் காணப்படுகின்றது. ஊடக சுதந்திரம் இருக்கின்றது என்றால் ஊடகவியலாளர்கள் ஏன் தாக்கப்படுகின்றார்கள்? அவர்கள் ஏன் தமது கருத்துக்களை சுதந்திரமாக முன்வைக்க முடியாமல் உள்ளது? .

என்னதான் பேனாக்கள் வாள்முனையை விடக் கூர்மையானவை என்று கூறப்பட்டாலும் துப்பாக்கிகள் பேனாக்களையும் ஒலிவாங்கிகளையும் கமராக்களையும் விட்டுவைக்கவில்லை என்றே சொல்ல வேண்டும். அடக்குமுறைகளை வெளிக்கொண்டுவர வேண்டிய பணியே அடக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றது.

ஒருவரை ஆக்குவதும் அழிப்பதும் உச்சத்தில் ஏற்றி விடுவதும் தாழ்த்துவதும் ஊடகவியலாளர்களின் கைகளிலேயே இருக்கின்றது. இதனால் தான் அன்று நெப்போலியன் அவ்வாறான வார்த்தைகளைக் கூறினார்.ஒரு நாட்டின் ஆட்சியை மாற்றி அமைக்கும் வலிமை ஊடகத்திற்க்கு இருக்கின்றது என்றால் மிகையாகாது.பேனா முனைமூலம் தமது கருத்துக்களை மக்களிடம் கொண்டுசெல்லும் ஊடகவியலாளர்களின் பெறுமதியை யார் உணருகிறார்கள்? அதைவிட அவர்களை அழிப்பதிலேயே மும்முரமாக இருக்கிறார்கள்.

ஊடகவியலாளர்களை கௌரவிக்கும் தினம் ஒன்று இருக்கின்றது என்று இன்றைய தலைமுறையில் எத்தனை பேருக்குத் தெரியும்? அப்படித் தெரிந்திருந்தாலும் அவர்களது எண்ணிக்கையை விரல் விட்டு எண்ணமுடியும். ஊடக சுதந்திரம் எமது நாட்டில் மட்டுமன்றி சர்வதேசத்திலும் கேள்விக்குறியாகவும் இருக்கின்றது. ஊடகங்கள் மீதிலும் ஊடகவியலாளர்கள் மீதிலும் மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகள், உரிமை மீறல்கள் தொடர்பாக தொடர்ந்துகுரல் எழுப்பி வரும் அமைப்பு ஒன்று இருக்கின்றது. அதுதான் எல்லைகள் அற்ற ஊடகவியளாளர்கள் அமைப்பு.
றவைாழரவ டிழசனநசள (சநிழசவநசள ஙயவெ

1991ஆம் ஆண்டில் இருந்து ஊடகத்திற்கென சுதந்திரம் உண்டு எனக் குறிப்பிடுகின்ற போதிலும் இன்ற பெயரளவில் மட்டுமே காணக்கூடியதாக இருக்கின்றது. இச்சூழ்நிலையில் உலக ஊடக தினம் அர்த்தமுள்ளதா? என்பது சந்தேகத்திற்குரியதே. எது எவ்வாறு இருப்பினும் ஊடகவியலாளர்களினால் பல நன்மைகளை நாட்டிற்குப் பெற்றுக் கொடுக்க முடியும் என்பது மறுக்க மற்றும் மறைக்கபட்ட உண்மை.



யாழ்பாண வாழ்வியலோடு பாரம்பரியமும் பண்பாடும் ஒன்றோடு ஒன்று தொடர்பாட்டிருந்தன. சடங்குகளும் சம்பிரதாயங்களும் ஏதோ ஒரு காரணத்திற்காக இன்று வரை பின்பற்றப்படுகின்ற போதும் பாரம்பரிய பொருட்கள் சில காலத்தால் மறைக்கப்பட்டு விட்டன.


ஆரம்ப காலத்தில் சமுதாயத்தின் மேற் தட்டு வர்க்க மக்களின் பாவனையாக பித்தளை பொருட்கள் காணப்பட்டன. வணிகர்களால் கட்டப்பட்ட கல் வீடுகளில் அதிகளவு இப் பொருட்களை காணமுடியும். பண்டைய தென்னிந்திய மன்னர்கள் படையெடுப்புக்களோடும் ஒல்லாந்தர் போர்த்துகீசரின் வருகையோடும் பித்தளைப் பொருட்கள் பாவனைக்கு வந்தன. தட்டம், தாம்பாளம், வெற்றிலைத்தட்டம் போன்ற வீட்டுப் பாவனைப் பொருட்களும் விளக்கு, குடம் போன்ற சமயத்தோடு தொடர்புடைய பொருட்களும் பாவனையில் இருந்தன.

யாழ்ப்பாணம் மர வேலைப்பாட்டிற்கும் சிறப்பான இடமாகும். முன்னைய காலங்களில் பொருளாதார வசதி கொண்டவர்களின் வீடுகளில் மர வேலைப் பாடுகளுடன் கூடிய பெட்டகம் இருக்கும். யாழ்ப் பாணத்தவரின் வீட்டுப் பாவனை பொருட்களின் பெட்டகம் முதன்மையானது. இதில் விலையுயர்ந்த பொருட்களை பாதுகாப்பாய் வைப்பதற்கு ஏற்ற வகையில் பலம்பொருந்தியதாய் அமைந்திருக்கும். சில பெட்டகத்தின் மேற் பகுதியில் ஒருவர் படுத்துறங்கலாம். இன்று அருகிச்செல்லும் பெட்டக்கப்பாவனை ஒரு காலத்தில் யாழ்ப்பாணத் தவரின் வீட்டு பாவனைப் பொருட்களில் முக்கியம் வாய்ந்ததாக அமைந்திருந்தது.

வீட்டுப்பாவனை பொருட்களாக காணப்பட்ட பித்தளை பொருட்கள் பின்வந்த காலத்தில் பாவனையில் இருந்து தூக்கி வீசப்பட்டன. அலுமினியப் பொருட்கள், சில்வர் பாவனைக்கு வந்ததும் பித்தளை பின்னுக்கு தள்ளப்பட்டு விட்டது.

பித்தளைப்பொருட்கள் பாரம் கூடியனவை அலுமினியம் சில்வர்ப் பொருட்கள் பாரம் குறைந்தவை.

# பாவனையின்றிப்போன பண்டைய பொருட்கள்





பாவனைக்கு இலகுவான பொருட்கள் மக்கள் மனதில் இடம்பிடிக்க பித்தளைப் பொருட்கள் பின்னுக்கு தள்ளப்பட்டது. சடங்குகள் விழாக் களின் போது சில பித்தளை பொருட்களை காண கூடியதாக இருக்கும். திருமணங்களின் போது மணமக்களின் தலையில் பாலறுகு வைப்பதற்கு வெற்றிலைத்தட்டம் பயன்படுத்தப்படுகின்றது.

தட்டம் தாம்பாளம் வெற்றிலைக்கிண்ணம் போன்றவற்றில் கலை என்ற தனிப்பரிமாணம் மட்டும் இருக்காது. இவை பாவனைப் பொருட் கள் தான். அழகியல் கவர்ச்சி போன்றவற்றால் பூரணப்படுத்தப்படுகின்றன. கலைத்திறனை பித்தளைப் பொருட்களில் காணகூடியதாக இருக் கின்றது.



இன்று சில பித்தளைப்பொருட்களை அரும் பொருட் காட்சியகங்களில் மட்டுமே காணக் கூடியதாக இருக்கின்றது.

தமிழர் வாழ்வோடு இணைந்திருப்பது அம்மி. ஆரம்ப காலங்களில் அரிசி அரைப்பதற்கு இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை.



கருங்கல்லினால் செய்த அம்மி ஆட்டுரல், திருகை போன்றன எல்லோர் வீடுகளிலும் இருக்கும். இவற்றில் அரைத்தே உணவுகளை தயாரித்தனர். பின்னர் கால மாற்றம் புதிய புதிய இலகு முறையிலான இயந்திரக் கண்டுபிடிப்புக் களும் பண்டைய பொருட்கள் வசதியானவர் களின் வீட்டு மூலைக்கு சென்றது. வசதி குறைந்த கீழ் வர்க்க மக்களின் பாவனையில் பின்னரும் இவை இருந்தன. தற்போது அம்மி உரல் போன்றன சடங்குகளின் போது பயன்படுத்து வதனை காணக்கூடியாத இருக்கின்றது.

'பழையன கழிதலும் புதியன புகுதலும் காலத்தின் மாற்றமே'. ஆனால் தற்போது அழகிற்காகவும் வீட்டு அலங்காரத்திற்காகவும் பித்தளை பொருட் களை தேடி வாங்குகின்றனர். பித்தளையால் செய்யப்பட்ட யானை, பிள்ளையார் போன்ற உருவங்களை விரும்பி வாங்குகின்றனர். எம் முன்னோர்கள் பின்பற்றிய பொருட்கள் பாவனை யில் இல்லாவிட்டாலும் அவை பாதுகாப்பாக இருக்க வேண்டும். நாளை எம் அடுத்த தலை முறைக்கு இவை அடையாளப்படுத்தப்பட வேண்டும்.

முருகாத்தினி.எஸ்




# அழிந்து போகும் ஆன்மீகம்



நமது முன்னோர்களின் காலத்தில் இந்து ஆலயங்களில் போற்றப்பட்ட ஆன்மீக தன்மை தற்காலத்தில் பேணப்படுகின்றதா? ஏன ஆராய்ந்து பார்த்தால் நமக்கு கிடைக்கும் பதில்கள் எம்மை வியக்க வைப்பதாகவே அமைகின்றது.
தற்கால இளைய சமுதாயத்தில் கரகாட்டம் எனும் பதத்தினை அறிந்தவர்கள் எத்தனை பேர் இருக்கக்கூடும்? அவ்வாறே அறிந்திருந்தாலும் அதைப் பற்றிய பூரண அறிவு அவர்களிடத்தில் இருக்குமா?

அவ்வாறே இருந்தாலும் அந்த இளம் பருவத்தினர் அதனை பார்க்க விரும்புகின்றனரா? தாமும் அக்கலையைக் கற்க விரும்புகின்றனரா? என்றால் பெரும்பான்மையானோர் 'இல்லை' என்றே கிடைக்கின்றது.

இந்நிலைமை கரகாட்டத்திற்கு மட்டுமல்ல அக்கலையை ஒத்த 'காத்தவராயன் கூத்து', 'இலக்கிய கதைகளின் நாடகம்' போன்றவற்றிற்கும் ஏற்பட்டுள்ளது.
இவற்றைத் தவிர முன்னைய காலங்களில் ஆலய உற்சவகாலங்களில் பல்வேறு வகையான நிகழ்வுகள் இடம்பெறும்.உதாரணமாக சொற்பொழிவுகள், வில்லுப்பாட்டு, கூத்துக்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.
இவை கூட இன்று பெரும்பாலும் இல்லாமல் போய்விட்டது.

இதற்க்கு காரணம் என்ன? இளம் சமூகத்தினர் ஆன்மீகத்தை விரும்பவில்லையா? அல்லது அவர்கள் பாரம்பரிய கலைகளைப் பற்றி அறிய விரும்பவில்லையா?
இருப்பினும் இத்தகைய கலைகளின் மறைவிற்க்குப் பின்னால் 'கோஸ்டி' எனப்படும் திரை இசைப் பாடல்களை இசைக்கும் நிகழ்ச்சி வளர்ச்சி பெற்றுள்ளது என்பது மறைக்க மற்றும் மறுக்க முடியாத உண்மை. 'திருவிழாக் காலங்களில் பக்திப் பரவசத்துடன் விரதம் இருந்து இறைவனை தரிசிப்பார்கள் மக்கள்.

இறுதி நாளில் பல்வேறு வகையான நிகழ்வுகள் செய்து மனக்களிப்புடன் இருப்பதற்காக கச்சேரிகளும் நாட்டுக் கூத்துக்களும் இடம் பெறச்செய்வது வழமை' என்கிறார் கோவில் நிர்வாகப்பெண்.


எனினும் இவ்வாறான நிகழ்வுகள் இறுதியில் பெரும்பாலும் இரவு வேளைகளிலேயே இடம் பெறுகின்றன. இதனால் கூட இவை பெரும்பாலும் தீய விளைவுகளை கொடுப்பதாக அமைகின்றது. இது குறித்து புவனேஸ்வரி (வயது 49) என்ற பெண் கூறுகையில் 'மனதைக் கவரும் இன்னிசைகளை இரவு வேளையில் போடுவதால் குறித்த நிகழ்வு நிறைவடைய பல மணிநேரம் ஆகிறது. இதனால் பெண்கள் வீடு செல்வது கடினம். இது தேவையற்ற கேளிக்கையாகவும் கலாசார சீரழிவையும் ஏற்படுத்திவிடுமோ? ஏன் எண்ணத் தோன்றுகிறது' என்கிறார்.

முன்னைய காலத்தில் ஆலயங்களில் கூத்துக் கட்டுபவர்களிடம் கேட்டால் இன்னும் பல சுவாரஸ்யமான விடயங்கள் கிடைக்கும் என்றால் யாழ்ப்பாணத்தை அண்டிய பகுதிகளில் அவ்வாறானவர்களை காணவே முடியவில்லை.

'நாமெல்லாம் அந்தக்காலத்துல பெரிய ஆட்டக்காரர் நமக் கென்றே சனம் வரும். நாங்க ஒரு குழு.அதில் நிறையப் பாத்திரம் இருக்கு.. அதை சிறப்பா செய்வம். இப்பெல்லாம் நமக்கு ஆடும் வாய்ப்பே இல்லை. எல்லாக் கோவிலயும் கோஸ்டிதான் போடுறாங்க. அதத்தான் சனங்களும் பாக்கிறாங்க. ஆனா அதால ஒரு பிரியோசனமும் இருக்கிறதா? எனக்குத் தெரியல. நாம ஒரு இலக்கிய கதைய ஆட்டமா போடுறதால சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் புராண இலக்கியங்களை அறியக் கூடியதா இருக்கு.யாரும் அத யோசிக்கிறயில்ல. நாம இப்பவும் ஆடத்தயாரக இருக்கிறம். வாய்ப்பில்லையே' என்கிறார் நாகராசா எனும் பரம்பரை ஆட்டக்காரர்.

'கூத்துக்காரருக்கு கூத்து எப்படி ஒரு தொழிலோ அதே போன்றே நமக்கு இது தொழில். ஆலய உற்சவ இறுதி நாளில் இசை விழாவிற்காக எம்மை ஒப்பந்தம் செய்வார்கள். நாம் அவற்றை வழங்குவோம் .அத்துடன் எமது பணி முடிந்தது. இருப்பினும் இளவயதினர் திரைப்படப் பாடல்களை அதிகம் விரும்புவது இயல்பு' என்கிறார் இசைக் குழுவை இயக்கி வரும் அருணாசலம் என்பவர்.

இத்தகை சூழ்நிலையில் இளவயதினரைத் தொடர்பு கொண்டு அவர்களது எதிர்பார்ப்பை அறிய முற்பட்ட வேளை அவர்களது எதிர்பார்ப்பு 'கோஸ்டி' என்பதாகவே இருந்தது. இவற்றின் மூலம் எவ்வித நலனும் இல்லை என்பதை அவர்கள் உணரும் போதிலும் கோஸ்டியை தான் அவர்கள் மனம் நாடுகிறது.



இன்றைய இளைஞர்களின் விருப்பங்களும் தேவைகளும் வேறுபட்டவை. அவர்கள் பாரம்பரிய இசை நாடகங் களையும் கூத்துக்களையும் விரும்புவதில்லை. அவர்களின் தேவைகளையும் விருப்பங் களையும் பூர்த்தி செய்வதாக இன்றைய கோஸ்ரிகள் அமைகின்றன.

மனிதர்களை நல்வழிப்படுத்தவே கோவில்களும் சடங்குகளும் உருவாக்கப்பட்டன. ஆனால் கோவில் திருவிழாக்களில் அரங்கேற்றப்படும் இத்தகைய இசைக்கச்சேரிகள் இளைய சமுதாயத்தை சீரழிக்கும் முயற்சியில் ஈடுபடுவதாக பெரியவர்களால் குற்றம் சுமத்தப்படுகின்றது.



மிருஷா.ர.கே



# எத்தனை பேருக்கு வாழ்வளிக்கின்றது ?
# இந்த மெரினா கடற்கரை சாலை...............

வானமே கூரை எனக்கொண்டு தம் இரவுப் பொழுதை கழிக்கின்றனர் இறைவனின் குழந்தைகள். அலையின் ஓசைகளில் வாகன இசைச்சலில் தூங்கிப் பழக்கப்பட்டு விட்டனர் இவர்கள். எத்தனை பேருக்கு வாழ்வழிக்கின்றது இந்த மெரினா கடற்கரை சாலை என எண்ணத் தோன்றுகின்றது. காலையில் தம் வேலைகளை முடித்து விட்டு இரவில் விடு போல மெரினாவிற்கு வந்து சேர்கின்றனர்.

சென்னையில் வங்கக் கடலோரம் அமைந்துள்ளது மெரினா கடற்கரை. இதன் நீளம் 12 கிலோ மீட்டர் ஆகும். இது உலகின் இரண்டாவது மிக நீளமான கடற்கரை. சென்னைக்கு வரும் பெரும்பாலான சுற்றுலாப் பயணிகளின் பொழுதுபோக்கும் இடமாக திகழ்கிறது இந்த மெரினா கடற்கரை.

இந்த கடற்கரை தண்ணீருக்கு பிரபலமோ இல்லையோ உணவுப் பொருட்களுக்கு மிகவும் பிரபலம். சுண்டல் ஏலக்காய் டீ பஜ்ஜி பேல்பூரி வகைகளை இங்கு ஒரு பிடி பிடிக்கலாம். என்னதான் குளிப்பது தடை செய்யப்பட்டிருந்தாலும் ஏராளமானோர் இன்று வரை குளித்துக்கொண்டுதான் இருக்கின்றனர். இக் கடற்கரையைக் காண தினமும் ஆயிரக் கணக்கானோர் வருகின்றனர். துறைமுகத்திலிருந்து சாந்தோம் வரை விரிந்து பரந்துள்ள இக்கடற்கரையை 1880 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் அழகுற வடிவமைத்தனர். இப்பெருமை ஆங்கிலேய கவர்னர் 'மவுண்ட் ஸ்டுவர்ட் எல்பின் ஸ்டோன் கிராண்ட் டப்' என்பவரையே சேரும்.

மெரினா கடற்கரையினூடாக செல்லுகின்ற பாதை வழியே எத்தனை அறிஞர்களதும் பெரியார்களதும் சிலைகள் வீதியை அலங்கரித்து நிற்கின்றன. சாந்தோம் வரும் வழி முழுவதும் கடற்கரை யோரமாய் போர்த்திய படி படுத்துறங்கும் ஒரு கூட்டம்; அந்த கடற்கரையில் இரவு வேளையிலும் உடற்பயிற்சிக்காய் இவர்களை தாண்டி செல்லும் வயதான பெருசுகள் கூட்டம். இதனை விட கடற்கரையில் விளையாடும் சிறுவர்கள், வரும் உல்லாசப்பயணிகளுக்கு சுண்டல் விற்கும் சிறுவர்கள், வயதானவர்கள் என எப்போதும் கல கல என நிறைந்திருக்கும் இந்த கடற் கரை. இவர்கள் யார் ஏன் இங்கு வந்து படுத்திருக்கிறார்கள்? என மனதுக்குள் எண்ணத்தோண்டுகின்றது.


'வேறு மாவட்டங்களில் இருந்து சென்னையில் வாழவேண்டும் என்று வந்தவர்களும் ஊரை விட்டு ஓடி வந்தவர்களும் தான் இந்த கடற்கரை வாசிகள். அதை விட போதை பொருளுக்கு அடிமையானவர்கள் ஜெயிலுக்கு சென்று திரும்பியவர்கள் வீட்டிலிருந்து துரத்தி விடப்பட்டவர்கள் என எல்லோரும் இங்க தான் வாழ்கின்றார்கள்.

காலையில் வேலைக்கு போய்விட்டு இரவில் தூங்குவதற்கு மெரினா நோக்கி வருகின்றார்கள். சாந்தோம் வழியாக மெரினா நோக்கி செல்லும் வழியில் நாற்றம் வீதியால் செல்பவர்களின் கைகளை மூக்கினை நோக்கி கொண்டு செல்கின்றது. அது ஒரு சேரிப்புறம் மாதிரி இருந்தது. தகரங்களும் முழுமைபெறாத குடிசை வீடுகளும்சேரி புற அமைப்பை எடுத்து காட்டுகின்றது. மெரினா கடற்கரை மணல் வழியே காலையில் சீட்டு ஆடி கட்டுகளாய் கொட்டிக்கிடக்கும்.

போர்த்திய சீற்றியை சுற்றியபடி பெண்களும், மணலில் மேலே மெத்தையமைத்து உலகம் மறந்து உறங்கிக்கொண்டிருந்த சிறுவர்களும் அதிகாலை வேளையில் கண்களை ஒருநிலையில் இருந்து திரும்பிப் பார்க்க வைக்கின்றன.



காலையில் கடற்கரையில் மலம் கழித்தலும் முகம் கழுவுதலும் அன்றாட செயற்பாடுகள். ஆடலுக்கும் பாடலுக்கும் ஆசியர்கள் இன்றி மெரினா கடல் அலையை தாளக்கட்டாக எண்ணி இளவட்டத்தினர் நடனம் பயில்கின்றனர். அலைவரும் வேகத்திற்கு தாளகட்டெடுத்து நடனம் பயின்றது ஆச்சரியத்தை ஊட்டுகின்றது. நடனத்திற்கு ஆசிரியர் தேவையில்லை முயற்சி இருந்தால் எதுவும் நமக்கு ஆயுதமே என்பதை எடுத்து காட்டுகின்றது இளைஞர்களின் செயற்பாடு.





அலைபோல பிரச்சினைகள் வரும் ஆனால் அது நிரந்தரமில்லை. அலைக்கெதிராக நீச்சல் போட வேண்டும். பிரச்சினைகளை கண்டு சோர்ந்து போவதல்ல வாழ்க்கை. அது தான் எம் பலம்மிக்க சக்தியை அடையாளம் காட்டும் ஆயுதம். பிரச்சினைகள் என்ற சொல்லும் இந்த மக்களின் வாழ்க்கையும் எப்படி ஒத்துப் போகின்றது என்பதையே சிந்திக்க தோன்றுகின்றது.

வீட்டில் தந்தை பிரச்சினை, படிப்பதற்கு பண மில்லை, வாழ்வதற்கு வழி தெரியாதவர்கள், தங்க வீடில்லாதவர்கள், முயற்சி இருந்தும் செயல் படுத்த முடியாதவர்கள் என ஆயிரம் ஆயிரம் பிரச்சினைகளோடு மெரினா கடற்கரைதான் தஞ்சம் என்று நம்பி வாழ்பவர்களின் பிரச்சினைகளே கண்முன் தோன்றும்.

சின்ன சின்ன பிரச்சினைகளை கண்டு சோர்ந்து போகும் எங்களுக்கு புத்துயிர் தந்ததாக அமைந்தது. அலையென பிரச்சினைகள் வந்தாலும் நமக்கான இலக்கு மட்டும் அசைவதே இல்லை. அதே போல பிரச்சினைகள் வந்தாலும் எம் நம்பிக்கையும் அசையாது இருக்க வேண்டும்.


கடற்கரை மணல் மீது ஓடி வரும் நண்டு மணலை நோக்கி வருவதும் அலை அடிப்பது அந்த நண்டிற்கு தெரியாதா? தெரிந்தும் ஏன் இந்த நண்டு தண்ணிக்குள் தீக்குளிக்கின்றது.

அது தான் வாழ்க்கை. பிரச்சினை என்று தெரிந்து ஒதுங்கி விடாது அலையோடு எதிர் நீச்சல் போடும் நண்டை போல நம்பிக்கையுடன் வாழவேண்டும்.


மெரினா கடற்கரையே வீடு. நமக்கென்று யாரும் இல்லை ஆனால் எம்மை அரவணைக்க இந்த கடற்கரை இருக்கின்றது. நமக்கான வாழ்க்கை என்று தினம் தினம் பிரச்சினைகளும் போராட்டங்களும் வந்து போகின்றன. ஆனால் சளைக்கவே இல்லை இந்த மெரினா கடற்கரை வாசிகள். தினம் தினம் புதிய முகங்கள் ஆதரவற்ற உறவுகள் எல்லோரும் வாருங்கள் நான் இருக் கின்றேன் என்று அரவணைக்கும் மெரினா கடற் கரை.

'தாகம் தீராத தண்ணீரை போல தாயின் மடியில் எத்தனை ஜீவன்களும் தாகம் தீர்க்கலாம்....'

முருகாந்திவி.எஸ்



# அர்த்தமுள்ள திருமணம்



திருமணங்கள் ஒவ்வொருவர் வாழ்விலும் திருப்பங்களை ஏற்படுத்தும் சடங்காக கருதப்படுகின்றது. நாள் பார்த்து நேரம் பார்த்து இரு மனங்களை ஒன்றாக இணைக்கும் திருமணச்சடங்குகள் வாழ்வியல் முறைக்கு அரண் அமைத்து பாதுகாப்பு அளிக்கின்றது. ஒரு நாள் நிகழ்வு அரங்கேற்றத்திற்காக மாதங்களாக வருடங்களாக காத்திருக்கின்றனர். அப்படி என்னதான் இருக்கின்றது இந்த சடங்கு முறைகளில். அம்மி மிதித்து அருந்ததி காட்டி, மெட்டி அணிந்து மாலை மாற்றும் முறைமை இன்று வரை பின்பற்றப்பட்டு வருகின்றது. காலமாற்றத்தோடும் பாரம்பரிய முறைகள் காணாமல் போய் வருகின்றது. ஆனால் திருமண முறைகளில் மாற்றங்கள் ஏற்படவில்லை. அப்படி இந்த திருமண சடங்குகள் என்னதான் சொல்கின்றன?

## தாரை வார்த்தல்

பண்டைய காலத்தில் ஒரு பொருளை இன்னொருவருக்கு கொடுக்கும் போது மனம் மாறி பிற்காலத்தில் திருப்பி கேட்டு விடக்கூடாது என்பதற்காக தாரை வார்க்கும் பழக்கம் இருந்தது. இது கிட்டத்தட்ட ஒரு ஆவணத்தில் எழுதி வைப்பதற்கு சமனாகும். அக் காலத்தில் ஆவணப்பழக்கம் இல்லாததாலும் ஆவணத்தை பதிவு செய்வதற்கான வசதி இல்லாததாலும் இது ஒரு சடங்காக கருதப்பட்டு எல்லோராலும் பேணப்பட்டு வருகிறது.

## மெட்டி அணிதல்

திருமணங்களில் மணப்பெண்ணின் வலது காலை முதலிலும் இடது காலை இரண்டாவதாகவும் அம்மி மேல் வைத்து மணமகன் மெட்டி அணிவிப்பது வழமை. ஒரு ஆடவன் வேற்றுப் பெண்ணை பார்க்கக்கூடாது. அப்படி பார்த்தாலும் முகத்தை நேராக பார்க்க கூடாது அவளின் காலை பார்ப்பது தமிழர் வழக்கு. அவ்வாறு ஒரு பெண்ணின் காலில் மெட்டி இருக்குமானால் அவள் மாற்றான் மனைவி என அறிந்து அவளை தன் உடன் பிறந்த சகோதரியாக நினைக்க வேண்டும் என்பது மரபு. எனவே தான் பெண்ணின் காலில் மெட்டி அணிவிக்கின்றனர்.

## அம்மி மிதித்தல்

உலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய உலோகங்கள் எல்லாவற்றையும் வெப்பத்தின் வளைத்து விட முடியும். கருங்கல்லை உடைத்து விட முடியும். ஆனால் வளைக்க முடியாது. அதைப்போல கற்பு என்ற பண்பில் நான் வளைந்து கொடுக்க மாட்டேன். அதற்கு ஆபத்து வரும் போது கல் பிளந்து போவது போல என் உயிர் பிளந்து உயிர் போகும் என்பதை காட்டவே அம்மி மீது காலை வைத்து பெண்ணை மிதிக்க சொல்கின்றனர்.

## அருந்ததி பார்த்தல்

அருந்ததி என்பவள் வசிட்டரின் மனைவி. கற்பில் மிக்கவளான அருந்ததி தெய்வத்தன்மையால் நட்சத்திரமாகி விட்டாள் என கூறுவர். அருந்ததி நட்சத்திரத்தை காட்டி அவளை போல நீயும் கற்பில் சிறந்தவளாக இருத்தல் வேண்டும் என கூறுவதற்காக அருந்ததி பார்க்கப்படுகின்றது.

## தாலி கட்டுதல்

தமிழர் மரபில் தாலிக்கே முதலிடம் வழங்கப்படுகின்றது. தாலி கட்டினாலே திருமணம் பூர்த்தி அடைவதாக கருதப்படுகின்றது. தாலி கட்டுவது திராவிட மக்களிடம் தொன்று தொட்டு பின்பற்றப்படும் மரபாகும். ஆரம்ப காலத்தில் ஆண்கள் பல திருமணங்கள் செய்தார்கள். எதுவித கட்டுப்பாடுகளும் இல்லாததால் சமுதாயத்தல் குழப்பங்களும் சீர்கேடுகளும் ஏற்பட்டன. இதனால் சமுதாயம் தறிக்கெட்டுப் போய்விடும் என்று சிந்தித்து தாலி கட்டும் முறைமையை உட்புகுத்தினர். தாலி என்ற சொல்லிற்கு தாலம் என்பது வேர்ச்சொல் ஆகும். நாள் பார்த்து வருடங்களாக மாதங்களாக காத்திருந்து அரங்கேற்றப்படும் திருமண சடங்குகள் ஒரு மணி நேரத்தில் முடிந்து விடுகின்றன. ஆனால் அவை சொல்லி நிற்கும் அர்த்தங்கள் ஏராளம்.

மிருஷா.ர.கே

# சமூகத்தினால் தன்னிலை இழந்த பறை

காலத்தின் மாற்றத்திற்கேற்ப இந்த உலகமும் மாறிக் கொண்டு வருகின்றது. பழமையை மறந்து புதுமையை நாடுகின்றனர் மக்கள். இதனால் 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்ற முதுமொழி தற்போது வலுப்பெற்று வருகின்றது.

பெரியோர்கள் எதற்கு சொன்னார்களோ தெரியாது. ஆனால் தற்கால நடைமுறைக்கு இது சாத்தியம் ஆகியுள்ளது. இதற்க்கு பறை சிறந்த எடுத்துக்காட்டு. பறை தமிழர்களின் பாரம்பரிய கலை.இப் பாரம்பரிய கலை இன்று சமூகத்தினால் ஒடுக்கப்பட்டு எல்லோராலும் தாழ்த்திப் பார்க்கப்பட்டு வருகின்றது. இப் பறையை இந்தியாவில்ல தப்பாட்டம் என்றும் அழைப்பர்.

இன்றைய தலைமுறையில் பறையின் வரலாறு பற்றி அதிகமானவர் களுக்கு தெரியாது. அப்படி இருக்க இனி வரும் தலைமுறைக்கு எப்படி தெரியும்? இருப்பினும் ஆதிகாலத்தில் தொடர்பாடல் கருவியாக இப் பறை இருந்தது. இருப்பினும் இதன் இன்றைய நிலைக்கு சமுதாயம் மட்டுமே காரணம். பறை என்பது ஒரு கலை. இந்த வாத்தியக் கலை சாதியின் பெயரினால் வலுப் பெற்று வருகின்றது.

ஆரம்ப காலத்தில் இப்பறை எல்லோராலும் மதிக்கப்பட்டே வந்தது. இப் பறை சமூகம் சார்ந்த கலையாகும். ஆதிகால மனிதர்கள் வேட்டையாடுவதையே தொழிலாக செய்து வந்தனர். வேட்டையாடிய பின்பு ஓய்வாக இருக்கும் நேரங்களில் விலங்குகளின் தோல்களை கொண்டே பறையை செய்தனர். விலங்குகள் தம்மை தாக்க வரும் போது பறையினை அடித்து ஒலியை எழுப்பி தாத்தி தம்மை பாதுகாத்து கொண்டனர். இது மட்டுமல்லாது ஒரு மலையில் இருந்து இன்னொரு மலையில் இருப்பவர்களை அழைப்பதற்கும் பறையை பயன் படுத்தி உள்ளனர்.

விலங்குகளைக் கொன்று தின்று மிஞ்சிப்போகும் தோலை எதிலேனும் கட்டிவைத்துஇ காய வைத்து மனம் போன போக்கில் அடித்து ஆடிய ஆட்டந்தான் காலப்போக்கில் கலைவடிவமாகவும்இ வாழ்வியல் உணர்ச்சிகளை உணர்த்தும் சத்தமாகவும் மாறி, திருமணம், இறப்பு, சிறு தெய்வ திருவிழா நிகழ்வுகள் என மக்களின் அன்றாட வாழ்க்கையின் அத்தனை சுக துக்கங்களிலும இடம் பெறும் கலையாகியது.

இவ்வாறு ஆதிகாலத்தில் முக்கியமாக இருந்த கலை இன்று மதிக்கப்படாமல் இருப்பதற்கு முழுக்க முழுக்க காரணம் இந்த சமுதாயம் என்றால் மிகையாகாது. பறை அடிப்பவர்களை என் இந்த சமூகம் இழிவாக பார்க்கின்றதோ? தெரியவில்லை


பறை செய்வதற்கு வேம்பு மாட்டுத் தோல் போன்றவற்றை பயன்படுத்தி வருகிறார்கள். அதிலும் குறிப்பாக தெருவோரங்களில் இருக்கின்ற வேப்ப மரங்களையே அதிகம் பயன்படுத்துவர். இதற்கு காரணம் பறை அடிக்கும் போது அதிலிருந்து சத்தம் அதிகமாக வெளிவர வேண்டும் என்பதற்காக... வீதிகளில் இருக்கும் மரங்கள் வாகனச் சத்தங்களை அதிகமாக உள்வாங்கிக் கொள்ளும். இதனால் பறை அடிக்கும் போது அதிகமான சத்தம் வெளியில் வரும். இதற்காகத் தான் பறை செய்வதற்கு தெருவோர மரங்களை பயன் படுத்துகிறார்கள். அதே போலத்தான் மாடுகளிலும் இளம் ஆண் மாடுகளின் தோலை எடுத்துத்தான் பறை செய்வார்கள். ஏனெனில் அதன் தோலில் உள்ள ரோமம் உரமாக இல்லாமல் இருக்கும்.

பறை அடிப்பவர்களை இந்த சமூகம் சாதியின் பெயர் சொல்லி ஒதுக்க ஆரம்பித்தது. இதன்படி ஆதி திராவிட தமிழர்களின் கலையாக பறை ஆட்டம் ஒதுக்கப்பட்டது. அவர்களின் வாழ்க்கை முறையையே காரணமாகக் கூறிய சமூகம் அவர்களின் வாழ்வோடு கலந்திருந்த பறையாட்டத்தை சாவுமேளம் என என முத்திரை குத்தியது.

இப்படியே காலம் செல்ல செல்ல சாதி குறியீடாக மாறியது. இளைஞர்கள் பறையடித்தலை அவமானமாக கருதத் தொடங்கினர். இவ்விதம் மெல்ல மெல்ல இக்கலை அழியும் நிலைக்கு வந்தது. இந்தியாவின் பாரம்பரிய கலையில் முக்கிய இடத்தை பெறும் பறையானது எமது நாட்டில் மதிக்கத்தக்க இடத்தில் இல்லாமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும.

பறை பற்றிய தப்பான அபிப்பிராயத்தை இந்த சமூகம் மாற்றிக் கொள்ள வேண்டும். இளைஞர்கள் இக் கலையை கற்பதற்கு முன்வர வேண்டும். இதன் மூலமே எமது பாரம்பரிய கலையான பறையை பாதுகாக்க முடியும்.

சி.சுகனியா





# மழைத் தூறலில் பிருந்தாவன்

இந்தியாவின் பிருந்தாவன கார்டன் மிகப் பெருமை வாய்ந்த இடம். முன்பு இந்த இடத்தில் தான் பல சினிமாப் படப் பிடிப்புக்கள் நடந்திருக்கின்றன.

எனக்கு இரவு வேளையில் பிருந்தாவனின் அழகைப் பார்க்கும் வாய்ப்புக் கிட்டியது. பாடலுக்கு ஏற்றாற்போல் நீரின் ஆடல் பார்ப்பதற்கு இதமாக இருந்தது. ஆற்றின் சலசலப்புக்கு மத்தியில் பிருந்தாவனின் அழகை இரசித்தது மறக்க முடியாத அநுபவம்.

இசைக்கு ஏற்றவாறு நடனம் ஆடும் தண்ணீர்ப் பெருக்கு எல்லோர் மனதையும் கவரும். தவிர திருவிஸ்வேஸ்வரய்யா அனையும் அதிலிருந்து வரும் மின் சக்தியும் நம்மை அதன் அருகில் நிற்க விடாது. அவ்வளவு வேகம். அதைப்பார்த்தால் திரும்பி வரவே தோன்றாது. அந்த 'ஜோ' என்ற சத்தம் இன்னும் என் காதில் ஒலிக்கிறது.

பிருந்தாவன் பூங்கா (பிருந்தாவனம் பூங்கா) கர்நாடக மாநிலத்தில் கிருட்டிணராச சாகர் அணையை அடுத்துள்ளது. இது ஒரு படிநிலை பூங்கா வாகும். பூங்காவிற்கான தளப்பணி 1927ம் ஆண்டு தொடங்கப்பட்டு 1932ம் ஆண்டு நிறைவு பெற்றது.

கிருட்டிணராச சாகர் அணையை அழகு படுத்தும் விதமாக இந்த பூங்கா உருவாக்கப்பட்டது. இது கஸ்மீரில் முகலாயர்கள் பாணியிலுள்ள சாலிமர் பூங்காவின் வடிவமைப்பை மாதிரியாக கொண்டு உருவாக்கப்பட்டது. இத்திட்டப்பணியை முன்னின்று செயல்படுத்தியவர் அப்போதய மைசூர் அரசின் திவான் சர் மிர்சா ஸ்மாயில் ஆவார்.

தொடக்கத்தில் இது கிருட்டிணராச சாகரா படிநிலை பூங்கா என அழைக்கப்பட்டது. தற்போது இது 60 ஏக்கருக்கும் மேல் 3 படிநிலைகளை கொண்டுள்ளது. குதிரை லாட வடிவில் முடிவடைகிறது.

பிருந்தாவன் பூங்கா 4 பாகமாக பிரிக்கப்பட்டுள்ளது. முதன்மை வாசல், தெற்கு பிருந்தாவன். வடக்கு பிருந்தாவன் மற்றும் குழந்தைகள் பூங்கா. பிருந்தாவன் பூங்காவை ஒட்டி 75 ஏக்கரில் அரசு பழப்பண்ணையும் 30 ஏக்கரில் நகுவனம் என்ற தோட்டக்கலை பண்ணையும் 5 ஏக்கரில் சந்திர வனம் என்ற தோட்டக்கலை பண்ணையும் உள்ளது. இவை அனைத்தும் கர்நாடக அரசின் தோட்டக்கலை துறையின் கீழ் வருகிறது.

பிருந்தாவன் அழகைக் கூறிக்கொண்டே செல்லலாம்.மனிதர்களால் கூட இப்படி ஆட முடியுமா? என்பது சந்தேகமே. இப்பகுதிக்கு பல இடங்களில் இருந்து மக்கள் வருகை தருவதால் இப்பகுதியில் கடைகளின் அளவும் அதிகமாக உள்ளது.

நாம் சென்ற வேளையில் மழை தூறல் போட்டுக் கொண்டிருந்தது. அழகுக்கு அழகு சேர்ப்பதாக இருந்தது அந்த நேரம்.

தட்ஷா.ஜோ

# கண்டனன் சீதையை.....

இசைநாடகம்



Print By : Noble printers. 0212220386